


உ

*சிவமயம்*

# ஆத்மஜோதி

*தாபிதம்: 1948*

ARTHMA JOTHY
Est. 1948
ISSN 1703-9185

மலர் 6: இதழ் 2
*பார்த்திப வருடம்*
*தை - பங்குனி*
*திருவள்ளுவர்*
*ஆண்டு*
*2037*

**கௌரவ ஆசிரியர்**
பேரறிஞர்
முருகவே பரமநாதன்
**பிரதம ஆசிரியர்**
திரு. வி. சந்தவனம்

**ஆசிரியர் குழு**
திரு. செ. சோமசுந்தரம்
திரு. ச. திருநடராசா
திரு. சிவ. முத்துலிங்கம்

**எழுத்தமைப்பு**
திரு. மா. கனகசபாபதி
**அச்சுப் பதிப்பு**
விவேகா அச்சகம்

**வெளியீடு**
ஆத்மஜோதி
தியான நிலையம்
பதிவு இல: 1476651

**தொடர்பு முகவரி**
Siva Muthulingam
217 Morningside Ave.
Apt. 912
Toronto, ON. M1E 3E4
Tel: (416) 724-6240
www.arthmajothy.org

## உள்ளடக்கம்

1. ஆசிரியர் தலையங்கம்
2. எங்குமுள்ள பிள்ளையார்
3. Catechism on Saivaism
4. திவ்வியம் பழுத்த சைவமும்
5. பிதிர் யஞ்ஞம்
6. திருவாதவூரடிகள் புராணம்
7. அமரர் கு. வி. மகாலிங்கம்
8. அருட்கவியார் என் பார்வையில்
9. திருத்தல யாத்திரை
10. இந்து சமயப் பேரவைச் செய்திகள்
11. கிடைக்கப் பெற்றோம்
12. Life of Sampanthar
13. சைவ சித்தாந்த சிகாமணி
14. ஈழத்துச் செய்திகள்
15. ஒல்லாந்து யாத்திரை
16. இல்லறஞானி அமரரானார்
17. ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை





# சமயக் கல்வி

கனடாவில் 1994ஆம் ஆண்டு நடைபெற்ற அனைத்துலகச் சைவ மாநாட்டினைத் தொடர்ந்து சைவமக்கள் மத்தியில் தமது சமயத்தை இந்த மண்ணில் வளர்க்க வேண்டுமென்னும் விழிப்புணர்வு வளரத் தொடங்கியது. அதன் பயனாகக் கோயில்களின் தொகை பெருகின. சமயக் கல்வியை புகட்டும் இடங்களும் அதிகரித்தன. சமய இதழ்களும் நூல்களும் வெளிவரலாயின.

எனினும் கோயில்களின் வளர்ச்சியோடு ஒப்பிடுகையில் சமயக்கல்வி வளர்ச்சி பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றது. வரவரப் பல சமயப்பாடசாலைகள் மூடப்படுகின்றன. மாணவர் வரவு குன்றியமை பிரதான காரணமாகச் சொல்லப்படுகின்றது.

மாணவர் வரவு குன்றக் காரணம் என்ன?

பாடசாலைகளில் வீட்டு வேலைகள் அதிகம் கொடுக்கப்படுவதனால் சமயக் கல்வியில் பிள்ளைகளாற் கவனஞ் செலுத்த முடியவில்லை என்று பெற்றோர் விளக்கந் தருகிறார்கள். இது நொண்டிச் சாட்டு என்பதை சமயத்தைக் கற்றுவரும் மாணவர் பலர் எமக்கு நிரூபிக்கின்றார்கள். அவர்கள் பாடசாலை வேலைகளோடு சமயத்தைப் படிக்கவில்லையா?

மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்பார்கள். பெற்றார்களுக்கு மனம் இருந்தால் பிள்ளைகளுக்கும் நேரம் இருக்கும். பரதநாட்டியம் மிருதங்கம் போன்ற கலைகளில் இருக்கும் ஆர்வம் தமிழிலும் சைவத்திலும் இல்லாமல் இருப்பது கவலைக்குரியது.

சமயக்கல்வி சமய அறிவை வளர்ப்பதற்காக மட்டும் புகட்டப்படுவதில்லை. பிள்ளைகளை ஒழுக்கமுள்ளவர்களாக உருவாக்குவதற்கு, நன்னெறியில் அவர்களை வளர்த்து ஆளாக்குவதற்குச் சமயக் கல்வி இன்றியமையாதது என்பதனைப் பெற்றோர்கள் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

தமிழ்ப் பிள்ளைகளை நல்ல ஒழுக்கமுள்ளவர்களாக வளர்த்தெடுக்கும் நோக்கத்துடன் கடந்த தைப்பூசத்தன்று அருள்மிகு வரசித்தி விநாயகர் ஆலயம் இலவச சமய வகுப்புகளைத் தொடங்கியிருப்பது வரவேற்கத் தக்கதும் பாராட்டுக்குமுரிய ஒரு தெய்வீகப் பணியாகும். பெற்றோர்கள் இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

- வி. கந்தவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# எங்குமுள்ள பிள்ளையார்

**பன்னாலை வரத்தலை விநாயகர்**

மன்னாதி மன்னர்க்கும் மன்ன ராவார்
மதியாத மலத்தர்க்கும் மகிமை யீவார்
தொன்னூலின் பொருளாகத் தோன்றி நிற்பார்
தூயமனக் கோயில்களில் ஊன்றி நிற்பார்
எந்நாளும் நெற்றியிலே திருநீ றாளும்
ஏற்றமிகு தூயதிருத் தொண்டர் வாழும்
பன்னாலை வரத்தலையைப் பதியாய்க் கொண்ட
பரமசிவன் பிள்ளையினைப் பரவு வாமே. (24)

**இளவாலை ஆனைவிழுந்தான் பிள்ளையார்**

ஈனமனக் கயமுகனைக் கடிந்த வேந்தல்
இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் கடந்த வேந்தர்
ஆனவினை ஆகும்வினை யாவும் ஆள்வார்
அன்பர்களின் இன்பமனப் பூவில் வாழ்வார்
வானவர்கன் வாழ்த்துமிள வாலை வந்த
மாரூதப்(1) புரவீக வல்லி யாரின்
ஆனைவிழுந் தான்பதியில் அருளு கின்றார்
ஆனைமுக மானவவர்க் காளா வாமே. (25)

(1)மாருதப் புரவீக வல்லி - ஓசைகுறித்து நீண்டது.

**இளவாலை பெரியவிளான் பிள்ளையார்**

பாசாங்கு சப்படைகள் பற்று வாரை
படருமா பாசத்துப் பற்றி லாரை
மூசீக(2) வாகனத்தில் தொற்று வாரை
மூவுலகும் ஓர்கணத்திற் சுற்று வாரை
ஆசாரம் பார்க்காதே அகிலம் எங்கும்
அடியார்கைப் பாலுண்ட அன்புத் தெய்வம்
பேர்சீரார் இளவாலை காக்கும் பெம்மான்
பெரியவிளான் பிள்ளையாரைப் பேணு வாமே. (26)

(2)மூசிகம் - ஓசைகுறித்து நீண்டது.





**இளவாலை**
**முள்ளானை விநாயகர்**

உள்ளாருள் இல்லானை உணர்வார் போற்றும்
ஓரானை ஈரானைப் பலபே ரானை
தெள்ளானைச் செழுங்கனித்தீஞ் சுவையி னானைத்
தேனானைப் பாலானைத் தீயா ரேனும்
தள்ளானைத் தாயானைத் தந்தை யானைச்
சான்றோர்வாழ் இளவாலைப் பதியைச் சார்ந்த
முள்ளானை விநாயகரை முகிழ்ந்து நெஞ்சம்
முப்போதும் தொழுவார்க்கு முத்தி யாமே. (27)

**எழுதுமட்டுவாள்**
**மருதங்குள விநாயகர்**

அளவற்ற ஆற்றலுடன் வந்து தித்தார்
அதிகாரந் தாய்தந்தை உவந்த ளித்தார்
தெளிவற்ற கயமுகனைச் செருவில் வென்றார்
திசையாவும் தொழுதேத்த அருளி நின்றார்
வளமிக்க வளர்ந்தோங்கும் எழுது மட்டு
வாள்மருதங் குளவிநா யகரைப் போற்றி
உளமார நாளெல்லாம் உருகி நின்றால்
ஒப்பாகி இருவினையும் உய்ய லாமே. (28)

**சரசாலை நுணுவில்**
**சிதம்பர விநாயகர்**

பெய்யாத மழைநன்கு பெய்ய வேண்டின்
பேசுமுயர் செல்வங்கள் பெருக வேண்டின்
நையாத உள்ளங்கள் நைய வேண்டின்
நமச்சிவா யம்நாளும் ஒலிக்க வேண்டின்
பொய்யான போய்மெய்யர் ஆக வேண்டின்
புவியோர்கள் பழிக்கின்ற பொல்லாங் கொன்றுஞ்
செய்யாத சரசாலை நுணுவில் சென்று
சிதம்பரவி நாயகரைச் சேவிப் பாமே. (29)

- தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Catechism on Saivaism

## 5. Love -Kindness - Compassion

51. What is the basis of Virtuous deeds (Sin free - blessful deeds)?
    Kindness, love and compassion.

52. What is the basis for getting rid of evils?
    Kindness, love and compassion.

53. To whom should we be kind, compassionate?
    We should be kind, loving and compassionate towards all the people.

54. What is the benefit of love and kindness?
    Good relationship, well being, peace and happiness.

55. How would you describe a loving heart?
    A loving heart is absolutely pure like the Holy Ash we apply on our forehead.

56. How could we encourage people to love all?
    By worshiping Lord Siva - the embodiment of love.

57. Who said God - "Lord Siva" - is the embodiment of love?
    Saint Thirumoolar.

58. Who described God - (Lord Siva) as the "Sweetness generated from love"?
    Saint Manickavasakar

59. How do we call the love shown by God (Lord Siva) towards all the living beings?
    Grace or compassion.

60. How do we call the love shown by the people towards God (Lord Siva)?
    Devotion.





# திவ்வியம் பழுத்த சைவமும் பவ்வியம் செழித்த நாவலரும்

பேரறிஞர் முருகவே பரமநாதன்

சென்ற இதழ் தொடர்ச்சி

பூக்களில் சிறந்தது தாமரை; தண்ணீரில் சிறந்தது கங்கை நீர்; மணிகளில் சிறந்தது உருத்திராட்சம்; பெண்களில் சிறந்தவர் உமாதேவியார்; குமாரர்களில் சிறந்தவர் குமாரசுவாமி; மலைகளில் சிறந்தது இமயமலை; இதுபோல் சமயங்களில் சிறந்தது சைவசமயம்.

சைவசமயமே சமயம் சமயா தீதப் பழம் பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டும் இந்தக்கருத்தை விட்டுப்
பொய்வந் துழலும் சமயநெறி புகுத வேண்டாம் முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாரும் செகத்தீரே
- தாயுமானவர்

திருமுருக கிருபானந்தவாரியார்
கந்தரநுபூதி உரையுடன் பக் 4, 5, 6, 7, 8

சைவம் சிவம் வேறாகாத நிலையில் சமயாதீதப்பழம் பொருளை விளங்கும் சைவசமயத்திலே குளித்தெழுந்த எல்லப்ப நாவலர் தந்த பாடல் தரும் எடுகோளையும் நாம் கருதுகோளாகக் கொண்டு தொழிற்பட வேண்டியகாலகட்டம் இது.

சைவத்தின் மேல் சமயம் வேறில்லை. அதில் சார் சிவமாம்தெய்வத்தின் மேல் தெய்வம் இல் எனும் நான் மறைச் செம்பொருள் வாய்மை வைத்த சீர்த்திரு தேவாரமும் திருவாசகமும் உய்வைத்தரச் செய்த நால்வர் பொற்றாள் எம் உயிர்த்துணையே
அருணைக்கலம்பகம்

ஈழமணித்திருநாட்டில் பத்தொன்பதாம் சகாப்த காலகட்டத்தில் அந்நியர் குடிபுகுந்து சைவத்தை நலிவடையச் செய்த முயற்சிகளை முறியடித்து நம் மொழி சமயம் சமூகத்தை அழிவினின்றும் பாதுகாத்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் செயற்றிறன் பற்றி இனிச் சிந்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவலர் எங்கள் காவலர்

சைவமும் சைவம் சார்ந்த பண்பாட்டியற் கோலங்களும் அநாதியில் இருந்து ஆலயங்களை மையமாகக் கொண்டு இயங்கின. ஊரானோர் தேவகுலம் என்ற வழக்காற்றால் இதை உணரலாம். இவ்வாலயத்தோடு தொடர்புடைய ஒவ்வொரு கிராமமும் சைவவெளிப்பாட்டின் சாட்சிகளாய் இலங்கின. நாம் வாழ்ந்த, வாழுகின்ற காலத்தின் பிரதிநிதிகளான நம்முன்னோர் கட்டிக்காத்த சமய மேம்பாடு குலையாமல், நெகிழவிடாமல் வாழக்கற்றுக் கொள்வதும் சமூகமேம்பாடாம். சமயம் பலவாயினும் பொதுமைநிலை, சிறப்புநிலை அவற்றின் முத்திரைச் சின்னங்களாகும். சமுதாயம் வளத்தோடும், வனப்போடும் வாழ்ந்தாலும், வழிவழி நாம் மேற்கொள்ளும், அக, புறவாழ்வில் சமைய மணமும், சாத்திரம் தோய்ந்த குணமும் இன்றியமையாதனவாகும்.

நாம் சைவசமயிகள், நம் சமயம் சைவம், சிவன் நமது தெய்வமென்ற கோட்பாடுகளும், குறிக்கோளும் நம்குருதியோடு இரண்டறக் கலந்தன. இதிலிருந்து சற்றுத்தடுமாறின் நாமேதோ பிழை செய்கிறோமென்ற உணர்வு உள்ளதைத் தொடுகிறது. எனவே ஒவ்வொருவரும் தம் சமய நெறியை மெய்யன்போடு பேணிக்காக்க வேண்டும். இ∴து எம்முதுசொம். (பழையசொத்து) ஏனைய சமயங்களை மதிப்போம். காழ்ப்பு இல்லாதிருக்கவே சமநோக்கில் எம்மை வழிநடத்துகிறோம். என்றாலும் எல்லாம் ஒன்றென்றால் நமக்குச் சமயமே தேவையில்லை என்றாகிவிடும். எவ்வளவோ நவீனத்துவ மத்தியிலும், பல் இனமத்தியிலும் சைவம் எம்மைவிட்டுப் போகவும் இல்லை. சைவம் சிவ சம்பந்தமானது. சிவசம்பந்தம் உடையவர்கள் சைவசமயிகள். சைவம் நீதிவடிவானது. இறைவனையே நீதியென்பர் (திருவாசகம் 416 அருள்பத்து) நாம் நீதிவழி எம்மை நெறிப்படுத்தி வாழ்பவர்கள். எம் மதமும் சம்மதமென்று சொல்லிக் கொண்டும் எதிற் சென்றாலும் இறுதியில் அடையும் முடிபு, சூனியமான ஏமாற்றமே என்கிறார் சுவாமி சரவணானந்தா அவர்கள். இந்நெறியிற் சைவசமயிகள் தம்மை ஒழுங்கான தடத்தில், வைராக்கியத்தோடு வழி நடத்த வேண்டும். இந்தச் செவ்விய பாதையைப் போட்டுத் தந்தவர் நாவலர் பெருமானே. தன்னையே முற்றுமுழுக்க அர்ப்பணித்த நாவலர் பெருமானின் சேவை வழிவழியாக எம் சமுதாயத்தையே





வழிப்படுத்துகிறது. கலகமானிடப் பூச்சிகளின் சமய ஆளுமைகள், நெறிபிறழாமல் கட்டிக்காத்த பெருந்தகையே ஆறுமுகநாவலர் என்னும் முழுமனிதன். போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் நம் மண்ணிற் கால்பதித்துச் சைவசமயிகளை மதமாற்றஞ்செய்து ஆலயங்களையும் அழித்ததோடு நிற்காமல், நம்பாரம்பரியமான கலை, கலாச்சாரம், பண்பாடு நாகரிகம், தனித்துவமான ஒழுகலாறுகள் எல்லாமே மாற்றமடைந்த வேளையிலே திசைகாட்டும் ஒளிவிளக்காய் நாவலர் அவதாரம் செய்தார்கள். ஒரு மிஷன், சபை, தாபனம், இயக்கம் செய்ய வேண்டிய சேவையை தனிமனிதனாக, தலை மகனாக நின்று, எல்லா எதிர்ப்புகளையும், தன் நிகரற்ற ஆளுமையால், விவேகத்தால் முறியடித்துத் தான் பிறந்த சமயத்தையும், தாய்மொழியையும் மேலோங்கச் செய்து, புதிய சமுதாயத்தையே கட்டி எழுப்பினார். அவரொரு தேசிய வீரர். மாமனிதர், சதுரப்பாடுடையவர். மனிதநேயம் நிறைந்தவர்: நாம் சைவசமயிகளாய்த் தாக்குப்பிடிக்கிறோம் என்றால் அவரிட்டகால்கோள் தான் காரணம். ஈழத்திருவிடத்திலும், தென்பாரதத்திலும் அவர் போற்றப்படுகிறார். காரணம் சைவசமய இரட்சகர் அவரேதான்.

## நாவலர் கோனின் அடிச்சுவட்டில் நாம்

பாரதி என்றாற் சுப்பிரமணிய பாரதிதான். நாவலர் என்றால் ஆறுமுகநாவலரேதான். திருவாவடுதுறை ஆதீனம் அளித்த இப்பட்டம் என்றும் நம் நாவில் உச்சரிக்க வேண்டிய தாரகமாகும். எனவே இறைவணக்கத்தில் நால்வர் இடம்பெறுவது போல, நாவலரைச் சந்ததி சந்ததியாகப் போற்றி வழிபட்டு நம்மை அவர் பாதையில் இட்டுச் செல்லவும் வேண்டும். நன்றி மறப்பது நன்றல்ல என்னும் வள்ளுவன் வாக்கைப் போற்றி, பெரியாரை மதிப்போமாக.

அரிய வற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராகக் கொளல். திருக்குறள் 443

தமர் - தமக்குச் சிறந்தார்.

தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லம் தலை

மேலது 444



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மிலேனிய காலகட்டத்திலும், இறுக்கமான சமய உணர்வோடு வாழ்கின்றோம் என்றால் நாவலர் பெருமானே அதற்குக் காரணகர்த்தா எனலாம். இன்று வேற்றுமதச் சமய ஊடுருவல், போர்க்கால நெருக்கடியைப் பயன்படுத்தி நடப்பினும் கடினசித்தங்களை உடைக்க முடியாமலும் போய்விடுகிறது. எனவே எம் சமயத்தையும், மொழியையும் இரு கண்களாகக் கண்ட நாவலர் காட்டிய செந்நெறியே நம் நன்னெறியாகும். ஒளவையும் நீதிவழுவா நெறிமுறையில் தம்மை இட்டுச் செல்பவரே மேலானவர் என ஒலித்தார். நாவலரை எங்கள் காவலர் என்போம். ஒரு சமயத் தந்தையுமாம். அவரது பாரிய திட்டங்களிற் சில வருமாறு:

- சைவசமயப் பாடசாலைகளை நிறுவியமை
- தமிழ் மொழியையும் சைவத்தையும் புரந்தமை
- நல்ல சேவை மனப்பான்மையுள்ள ஆசிரியர்களை உருவாக்கியமை்
- மாணவர்களைச் சைவப்பாரம்பரியக் கல்விக்கு வழிப்படுத்தியமை
- அச்சுயந்திரசாலை அமைத்து நூல்களை வெளியிட்டமை
- ஆலயந்தோறும் சமயப் பிரசாரஞ் செய்தமை
- திருநீறு, பஞ்சாட்சரம், உருத்திராக்கம் என்னுஞ் சிவசின்னங்களைப் பேணியமை
- நல்லொழுக்கங்களை வலியுறுத்தியமை
- பழைய ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்தமை
- வறுமை, பிணி, அறியாமை, கூடா ஒழுக்கம் என்பவற்றில் இருந்து மக்களை மீட்டமை
- பிறசமய ஊடுருவல்களைத் தடுத்தமை
- தேசீயம் பேணியமை, ஒற்றுமை காத்தமை
- சமயச் சார்பான விரதம், விழா, கொண்டாட்டம் போன்றவற்றை வளர்த்தமை
- சமூக அநீதிகளைக் களைந்தமை

வசனநடை நூல்களை உருவாக்கல் - போன்ற திடடங்களைச் செம்மையுற மேற்கொண்டு மக்கள் பணியாற்றிய நாவலர் ஐந்தாம் குரவராகக் கணிக்கப்பட்டார். அவரது முதலாம், இரண்டாம் சைவவினாவிடை, முதலாம் இரண்டாம், நான்காம் பாலபாடங்கள் பிரமாணிக்கம் ஆனவை. நூல்களை எழுதுதல், பதிப்பித்தல், புதிய நூலாக்கம், பழைய நூற்பரிசீலனை, உரைநடையாக்கல் என்பன நாவலர் நூற்பணிகளாம். பிழையின்றி நூல்களை





வெளியிட்ட பதிப்புச் செல்வர் இவர். வசன நடை கைவந்த வல்லாளர் எனப் பரிதிமாற்கலைஞராற் போற்றபபட்ட கலைமாச் செல்வர். மும்மொழி வல்லுநரான ஆறுமுகநாவலர் நுண்மாண் நுழைபுலமிக்க சான்றோன் மட்டுமன்றிச் சிந்தனைச் சிற்பியுமாம். அமைதியான, எளிய வாழ்வு. அடக்கமான போக்கு. என்கடன்பணி செய்துகிடப்பதுவேயென்ற இலட்சியம். அயராமுயற்சி, கண்டனம் செய்வதில் திறமைசாலி. அவரை வாழையடி வாழையாகப் போற்றிடுவோம் வாரீர்!

அருமறையாகம முறைகளுல கிலோங்க
 வடியனுள்ளத் தஞ்ஞான திமரநீங்கப்
பெருமை யொடு தவவிரத முலகோர் தாங்கப்
 பீடில் பரசமயகுழாமிரிந்தேயேங்க
வொருமை யொடு நல்லைநகருதித்தேவந்த
 வுத்தமநல்லாறுமுகப் பெம்மானே நின்
னிருமைபெறு திருவாக்கி னருமைதன்னை
 யின்பமுடன் கேட்பதினி யெந்நாளே.

சிவம்பழுத்த செஞ்சுவையே தேனேபாகே
 தெவிட்டாத தெள்ளமிர்தத்திரளே மேலாக
தவம் பழுத்த தனிவடிவே திருவெண்ணீறு
 தயங்கு திருமேனியுடைக் குருவே மிக்க
அவம் பழுத்த புறச்சமயத் திமிர மோட்டி
 யத்து வித சுத்த சித்தாந்தத்தினுண்மை
நவம் பழுத்த பொருள்காட்டிச் சைவநாட்டு
 நாவலனே நினைக் காணுநா ளெந்நாளே.

-பத்திராதிபர் சு. சரவணமுத்துப்பிள்ளை

நாவலன் திருவடிகள் நம் தலைமேலவ்கே
காவலன் திருப்பணிகளும் நம் கைமேலவ்வோ

- முற்றும் -

## அமுத மொழிகள்

பிறர்க்கு அன்பு செய்வதில் ஆனந்தம் காண்பதே கருணையின் பூரண லட்சணம். - றஸ்கின்

தீயவர்கள் பயத்திற்கும் நல்லவர்கள் அன்பிற்கும் அடிபணிகிறார்கள்

- ஓர் அறிஞர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிதிர் யஞ்ஞம்

**மாவை, மகாராஜஶ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்கள்**

சர்வோத்ர சுகிரஹ: ஸந்து
ஸர்வோ ஸந்து நிராமயா:
ஸர்வே பத்ரானி பஸ்யந்து
மா கஸ்சித் துக்கபாக் பவேத்

இவ்வுலகில் உள்ளமக்கள் அனைவரும் சுகமாக இருக்கட்டும். எல்லோரும் நோயற்றவர்களாக இருக்கட்டும். எல்லோருமே நன்மைகளை காணட்டும். ஒருவனும் துன்பத்தை அடைய வேண்டாம். இவ்வாறு வேதசாரங்கள் இயம்புகின்றன.

மனிதர்கள் அனைவரும் நூலில் சேர்க்கப்பட்ட மணிகள் போல இவ்வுலகத்தில் ஏதோவோர் வகையில் ஒருவரோடொருவர் பற்றிக் கொண்டுதான் உள்ளனர். அவ்வாறான பற்றுகள்போலவே இறைவனோடு சங்கமமாக சைவசமயிகளான நாமாற்றும் தெய்வீகக் கர்மானுஸ்டானங்கள் உதவுகின்றன.

இறைவன் எமது உள்ளத்தையடைய விரும்புகிறான். அந்த இறைவனுக்கு நாம் அர்ப்பணம் செய்யும் மனமும், அந்த உயர்ந்த மனதோடு ஆற்றும் கர்மாக்களும், சுத்தமாகவும் மகத்தானதாகவும் இருத்தல் வேண்டும். மனம் தூயதாக இருக்க வேண்டும். இன்றேல் தூய்மை கெட்டு தீமைகள் எம்முள் உறைந்துவிடும். இறைவனைத் துணையாகக் கொண்டு அவரது சந்தோஷத்திற்காக (பகவத் பரீத்தியர்த்தம்) ஆற்றும் அனைத்து செயல்களாலும் எமது ஆன்ம ஈடேற்றத்திற்கு அவை பெருந்துணை தருகின்றன. இவ்வாறாக சைவக் குடும்பங்கள் இறைவனைத் துணைகொண்டு வாழ்ந்து காட்டியுள்ளார்கள்.

யே நாஸ்ய பிதரோ யாதாஹ யேந யாதா: பிதா மஹா:
தேனா மார்கேண கந்தவ்யம் மார்க்கஸ்த்தோ
நாவஸீததி

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் தனது தந்தை எவ்வழியைப் பின்பற்றினாரோ, தனது பாட்டனார் எவ்வகையில் வாழ்ந்தாரோ அவ்வழியில் தான் செல்ல வேண்டும். பலபேர்





சென்ற பாதை சுத்தமாக இலகுவாகவும் எவ்வாறு இருக்குமோ, அதே போன்று தமது பிதுர்க்களது பாதையில் செல்ல வேண்டும். அப்பாதையில் நித்தியம், நைமித்தியம், காம்யம் என்ற கர்மாக்களை அனுஷ்டித்து, பூர்வ, அபர கிரியைகளை சிரத்தையோடு செய்ய வேண்டும். இதனால் சென்மம் எடுத்தோரெல்லாம் இவ்வுலகிலும் மறுவுலகிலும் சுகத்தை அனுபவித்து முத்திபெறுவார். இதுவே ஆன்ம ஈடேற்றம். இவ்வாறு ஆகம சாத்திரங்களும் ஸ்மிருதி, புராணங்களும் நன்குதெளிவாக அறியத்தருகின்றன. மனிதர்கள் ஆற்றும் பூர்வ, அபரகிரியைகளால் எழும் வேதமந்திரங்களும் அவ்வேத மந்திரங்களோடு ஆற்றும் தர்மகைங்கரியங்களும், அந்த தர்மங்களுடன் கலந்துனிக்கும் வஸ்துக்கள் அனைத்தும் இறைவனிடம், எவ்வாறு ஓர் யாக கர்மாவில் எழும் புகையானது சூரியனையடைந்து பின் மழையாக வர்ஷிக்க உதவுகிறதோ அதேபோன்று தர்மம் செய்பவர்களது குடும்பத்திற்கும் அவர்களூடாக நாட்டிற்கும் இறைவன் சுபீட்சத்தை சூரிய கதிர்கள் மூலம் தந்துதவுகின்றாராம். பிதிர் தர்ப்பணங்கள்கூட பிரம்ம யஞ்ஞத்தில் தான் பலனை தருகின்றதாம்.

இந்த வகையில் தான் மனிதன் தேவ யக்ஞம், பிதுர் யக்ஞம், பசு யக்ஞம், என்பன கிரமமாகச் செய்ய வேண்டுமென தர்மதேவதை கூட உத்தரவு செய்கிறது. கோயில் வழிபாடு, புண்ணிய தீர்த்தமாடல் என்பன தேவயக்ஞம் என்றும், தாய், தந்தையர்களின் சொற்படி நடந்து அவர்களை பேணுதலும் அவர்கள் இறந்த பின் அவர்களுக்கும் மூதாதையர்கட்கும் செய்யப்படும் கர்மாக்கள் பிதிர் யக்ஞம் என்றும், பசு மிருகாதிகளை வதைக்காது அவர்கட்காக ஆற்றும் கருமங்களை பசு யக்ஞம் என்றும் கூறப்படும். இவ்வாறு ஆற்றப்படும் யக்ஞ வழிபாடுகளில் ஹோமத்தால் தேவர்களும், பிராமண தானங்களால் சுவர்க்கத்திலுள்ளோர்களும், பிண்டதானத்தால் யமலோகத்திலுள்ளவர்களும், உற்றார் உறவினர்களை ஊண்கொடுத்து உபசரிப்பதாலும் உச்சிஸ்டதாலும் பேய் பிசாசுகளுக்கும், காக்கைக்கும் பிண்டம் கொடுப்பதாலும் நரகத்திலுள்வர்களும் திருப்தியடைகிறார்கள். முக்கியமாக பிதுர்களை 'புத்' என்னும் நரகத்திலிருந்து கரையேற்றி அவர்களைச் சாந்திப்படுத்த இவை உதவுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாபாரதம் அநுசாசன பர்வம் 143ல்
தந்யம் யசஸ்யம் ஆயுஷ்யம் ஸ்வர்க்கம் சத்ரு விநாசனம்
குலசந்தாரகம் சேதி சிராத்த மாகூர் மநீக்ஷிணம்

என்றபடி பித்ருக்களை உத்தேசித்து செய்யும் தர்ப்பணமானது தனம், கீர்த்தி, ஆயுள், ஸ்வர்க்கம் முதலிய நன்மைகளை அளிக்கும். சத்ருக்களை நீக்கும். தன்குலம் தளைத்தோங்கச் செய்யும் இறந்தவர்களுக்காக ஆற்றும் அபரக்கிரியைகளது மகத்துவம் பற்றி சகல நூல்களும் கூறும். அவற்றுள் மகாபாரதத்தில் தருமன் நச்சுநீரருந்தி இறந்த தம்பிமார்களின் அதிபராக்கிரமத்தை கொண்ட வீம, அருச்சுனனை விட்டு சகாதேவனை எழுப்பியது. அவன் தாயாகிய மாதுரியின் பிதுர்க்கடன்களை செய்வதற்கேயாம். இதேபோன்று கந்தபுராணத்திலும் இரணியன் யுத்தகளத்தில் புறங்கொடுத்து மறைந்ததும், சூரபத்மாவின் இறப்பையுணர்ந்து அவனது அபரக்கிரியைகளை செய்வதற்கேயாம். அகத்திய முனிவர் லோபா முத்திரையை வேட்டு சித்தன் என்பவனைப் பெற்றதும் பிதுர்க்கடன் செய்வதற்கேயாம். இதனைத் திருக்குறள்கூட தென்புலத்தார் தெய்வம் என முன்னிறுத்திக்கூறி பிறவிப்பயனும் இதுவேயாம் என்றார்.

'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை'

என பிதிரர்க்கும், தெய்வத்திற்கும், விருந்தினற்கும், தனக்கும் தருமம் செய்தல் தலையான தருமம் என்றார்.

கந்தபுராணத்தில் மார்க்கண்டேய படலத்தில்,
துறந்தவர்கள் வேண்டியதோர் துப்பரவு நல்கி
இறந்தவர்கள் காமுறும் இருங்கடன் இயற்றி
அறம் பலவும் ஆற்றி விருந்தோம்பு முறையல்லான்
பிறந்த நெறியாலுளதோர், பேருதவியாதோ

எனவும் பிறவிப்பயனின் புண்ணிய செயல் வழியாகப் பிதிர் கடன்களது அத்தியாவசியத்தை எடுத்துக் கூறிநிற்கிறது.

ஈழத்துப் பூர்வக் குடிகள் பரதேசப் பறங்கியர்களது





வருகைக்கு முன்பிருந்தே சுகமாக வாழ்ந்து காட்டினர். மரபு வழிபிறழாது பரம்பரையைப் பேணி வளர்த்து ஆச்சிரம தர்மம் மூலம் வாழ்ந்தார்கள். காலக் கொடுமை கலியுகத் தொல்லை, மேல்நாட்டு நாகரீகம், மாயா சக்தி வாதம், அன்னியரது சகவாசம் என்பன சைவச் சான்றோர்கள் அனேகரை மெல்லமெல்லத் தமக்குள் சமித்துவிட்டன. பலர் தகுந்தவராகவும், தகாதவராகவும் வாழவும் முற்பட்டனர்.

பசுவில் புல்லிலிருந்து பால் உண்டாகிறது. இத்தகைமையால் வாழ்வோர் தகுதியானவர்கள். பாம்பு பாலிலிருந்து நஞ்சை உண்டாக்கிறது. அத்தகைமையால் வாழ்வோர் தகுதியற்றவர்கள். தகுந்தவர்கள், தகாதவர்கள் என்ற இருசாராருக்குமிடையே தகுந்தவனாகவும், சான்றோராகவும் ஆலயங்களின் சுற்றாடல்களில் பலர் வாழ்ந்தாலும் அப்போதும் உலோகாயதம் அவர்களைத் தொற்றினிற்க வசதி கொண்டது. தகுந்த சைவமரபினர் இன்றும் தம் குலாசாரம், கல்வியாச்சாரம், வர்ணாச்சாரம், பரம்பரை என்பவற்றைப் பேணி சைவஉலகைக் காப்பாற்றிக் கொண்டுதான் இருக்கிறார்கள். இவ்வாறான குடும்பத்திலேதான் சான்றோர் வரிசையில் வாழ்ந்து காட்டினர் பலர். அனேகர் பண்போடும், பக்தியோடும் ஆசாரத்தோடும் வாழ்ந்து தமது குலப்பெருமையை நிலைநாட்டினர். ஊருக்கோர் அணிகலமாகத் திகழ்ந்தனர். சைவர்கள் தெய்வ நம்பிக்கையில் அசையாத பற்றுக் கொண்டு நன்கொடைகளால் கைக்கும், பெரியோர்களைப் பேணித் தலைக்கும் உண்மைபேசி முகத்திற்கும், பராக்கிரமத்தால் புயங்களுக்கும், நல்லொழுக்கத்தால் மனதிற்கும், நல்ல தோத்திரம் இதிகாசபுராணம் கேட்டதால் செவிக்கும், இவ்வாறானவற்றை, அழகு சாதனங்கள் கொண்டும் அருமையான சைவமக்களாக எம்முன்னோர் வாழ்ந்தனர். இன்று இந்த அருமையான செல்வங்கள் எம்மிடமிருந்து அகல்கிறது பிறமதத்தினரது சகவாசமும், அவர்களது செய்கைகளும் நோயாக தொற்றி உலோகாயுத சார்பில் மனிதனை ஈடுபட ஏவினிற்கிறது. இதிலிருந்து விடுபட நாமனைவரும் எமது மூதாதையர்களை நினைவு கொள்வதவசியம்.

சைவ சமயிகள் அனைவரும் சரியை கிரியைகள் மூலம் சாலோகத்தையும், கிரியைத் தொழில் மூலம் சாமீபத்தையும், யோகத்தொழில் மூலம் சாரூபத்தையும், ஞானத்தின் மூலம் சாயுச்சியத்தையும் அடைவரென்ற சிவாகமத்துணிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையனைத்தையும் ஒருமித்து பெறும் மார்க்கமாகவே தந்தை தாயாரைக் குறித்து அவர்களது ஞாபகமாக அமாவாசை, பௌர்ணமி விரத தர்ப்பணம், சிரார்த்தம், மஹாளயமாகிய பிதிர் கர்மங்களைத் தவறாது இயற்றல் வேண்டுவது முக்கியமெனவும் சிவாகமம் அறியத்தருகிறது. இவ்வுலகை விட்டுப் பிரிந்தவர் களிற்காக நடாத்தப்படும் ஆராதனைகளே பிதிர்க்கர்மாக்கள் எனப்படும். வேத சிவாகமங்கள் இதிகாசங்கள், புராணங்கள் அனைத்தும் பிதிர் தர்ப்பன மகிமைகளைக் கூறி அதை தவறாது ஆற்ற வேண்டுமென எமக்கு ஆணையிடுகின்றன. பிதிர் தர்ப்பணங்களால் பூமிகூட யௌவனமடைகிறதாம். இன்றும் ஆலய கும்பாபிடேகம், மற்றும் ஆலய கர்மாக்களில் அந்தணர்கள் உலகம் உய்யும் பொருட்டும் இறந்தோரது ஆத்மசாந்திக்கும், முனிவரின் ஆசிக்கும் தர்பண கர்மாக்கள் செய்வதை நாமறிவோம். இவ்வாறான தர்பண காரியங்களை முன்னெடுத்து அனைவரும் இப்பூமியைக் காப்பாற்றுவதோடு தத்தம் குலம் நிறைவுடன் செழித்துவாழ முயன்று பிரார்த்தியுங்கள் என்றும் வேண்டி நிற்கின்றோம்.

“புத்” என்ற தாதுவிலிருந்துதான் “புத்திரன்” என்ற பதம் உண்டானது. இறந்தோர் தாம்-தாம் செய்த கன்ம வினையின் காரணமாக நரகத்திலும் சேர்ந்திருப்பார். உயிர்கள் உடம்பைவிட்ட பின் சூக்கும சரீரத்தோடு யமலோகஞ் சென்று பிரமதண்டம் பெற்றுத் தான் செய்த கன்மங்களை விளங்கி அதற்கேற்ற போகங்களை அனுபவிக்கும் பொருட்டுத் தென்பூமியில் உள்ள எண்கோடி பிதிர் தேவர்களுள்ளே ஒரு வகுப்பினரிடத்தில் தனது அதிகாரத்தைக் கொடுத்து “ஓ பிதிர்களே! என்னை நினைத்து எனது புத்திரர்கள் அல்லது எனக்கு இசைந்தவர்கள் செய்யுங் கர்மபலனைப் பெற்று, எனக்குரிய பாகத்தை நான் எங்கு பிறவியெடுத்திருப்பினும் அங்கே அவன், அவள், அது முன்னிலையாகப் பெறும்படி உதவுங்கள்” என்று புத்திரர்களை நம்பி ஒப்புவித்து உத்தரவு பெற்றுச் செல்லுகிறது. இதனால் இறந்தோர் எங்கு பிறப்பெடுத்திடினும், பாவங்கள் நீங்கி, வேதனைகள் அகன்று நல் பேற்றைப் பெற்று மீண்டும் மீண்டும் பிறந்து மரணமடையாத நிலையைப் பெற்று தமக்கு ஆற்றிய புண்ணிய கர்மாவால் அவற்றைச் செய்தவர்களும் செய்வித்தோரும் எந்நாளும் சுகமாக வாழ வேண்டுமெனவும் ஆசீர்வதிப்பார்கள். பிதிர் தேவதைகளும் எம்மை அனுக்கிரகிப்பர். இது உண்மை ஆறுமுகநாவலர்கூட பிதிர்க் கர்மங்களைத் தவறாது





செய்யுங்கள் என வேண்டியுள்ளார்.

5000 ஆண்டுகளாக சைவர்கள் தத்தமது பிதிர்க் கடன்களை இடைவிடாது ஆற்றியே வருகிறார்கள். இப்போது இத்தர்மகாரியம் அருகிவருவது போல் தெரிகிறது. பிதிர் கர்மாக்களை இயற்றும் புண்ணிய தீர்த்தக் கரையோரங்களும், மூர்த்தி, தல விசேஷங்கள் கொண்ட தலங்களிலும் சைவர்கள் அணுக முடியாதவாறு அந்நியர் ஆக்கிரமிப்பினால் தடையாகிவிட்டது. இவ்வாறு விசேட புண்ணிய ஸ்தலங்களை இடித்துத்தள்ளியும் தீர்த்தக் கரைகளை ஆக்கிரமிப்பு செய்தாலும் சைவசமயிகளாகிய நாமனைவரும் நாயன்மார்கள் காட்டிய வழியினின்று எமது பிதிர் கடன்களை எங்கெங்கு வசதிகள் உண்டோ அங்கேனின்று துணிந்து எமது பிதிர்கர்மாக்களை சிரத்தையோடு ஆற்ற வேண்டியது அவசியம்.

- தொடரும்


FASHION FLORIST INC.

பாஷன் பூக்களஞ்சியம்

பாபுவின் கைவண்ணத்தில் பூக்கள் மாலையாகின்றன





தொடர்புகளுக்கு: பாபு

416-754-8282

4400 Sheppard Ave. East, Unit 5
Scarborough, ON.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாதவூரடிகள் புராணம்
## திருப்பெருந்துறைச்சருக்கம்

**சைவப்புலவர், சைவசித்தாந்தபண்டிதர், வித்துவான்**
**கு.வி.மகாலிங்கம்**

**தொடர்கட்டுரை:**

45. செய்தநற் கோயி லூடு சிறந்தவா சனமுஞ் சேர்த்து,
மெ-ய்தகு தொண்டரக் கெல்லா மிக்கவ ரிறைவற் சார்ந்து
கைதவ முடையார் நெஞ்சிற் கனவிலுங் காண நில்லா
மை தருகளத்தாய் கோட்டஞ் சமைந்தது வாயப வென்றார்"

பொ...ரை: மெய்யறிவையுடைய திருத்தொண்டர்களுக்கெல்லாம் அதிபர் இங்ஙனஞ் செய்யப்பட்ட நல்ல கோயிலினுள்ளே திவ்விய ஒரு ஆசனத்தையமைத்து, பரமாசாரியரை யடைந்து, கபடிகளது மனத்தின்கணிகழுஞ் சொப்பனத்திலும் அவர் காணுதற்கொரு சிறிது வெளிநில்லாத காளகண்டத்தையுடையவரே, கோயில் தீக்ஷாமண்டபத்திலக்கணம் பொருந்தச் செய்யப்பட்டு முடிந்தது என்று விண்ணப்பஞ் செய்தார்.

46. ஆயிடைக் குடபால் வெற்பி லாதபன் கரந்து ஞாலம், பாயிருள் பரந்த பின்பு கடிகையோர் பதினைந்தாகி மேயநல்லுயிர்களெல்லாம் விழித்துயில் பயிலுங் காலைத் தூயதொண் டர்க்குமாயை தொலையு நல் லமையந் தோன்ற."

பொ...ரை: மேற்குத் திக்கிலுள்ள அஸ்தமயன கிரியிலே சூரியன் மறைதலால், பூமியிலே இருள்பரந்த பின்னர் அத்த யாம மாகப் பெற்று, பகற்காலத்து வேண்டுமிடங்களிற் சஞ்சரித்த நல்ல ஆன்ம வர்க்கங்களெல்லாம் கண்களை முகிழ்ந்து நித்திரை செய்யும்போது, சித்த சுத்தியையுடைய திருவாதவூரடிகளுக்கு மாயாமலம் சத்திகுன்றும் நல்ல தருணம் வந்து சம்பவிக்க.

(ஆயிடை என்புழிக் காலம் இடப்பெயராற் கூறப்பட்டது. கரத்தலால் என்பது கரந்தெனத்திரிந்து நின்றது. ஆகிப் பயிலுங்காலை என முடிக்க. முற்பிற்பாடற உலகெங்கும் ஏககாலத்து வியாபித்தலிற் பாயிருளென விசேடித்தார். ஒளியினது அபாவமாகிய இருளை ஈண்டுப் பாயிருளென்ற திலக்கணை பற்றியென்க.)





47. "இங்கிவன் றன்னையாளுங் காலமீதென்று தெய்வ,
சங்கம தகன்று முன்னோன் மஞ்சனச் சாலை சார்ந்து,
குங்குமப் புழுகு சாந்தங் குழைத்து மெய்ம் முழுதும் பூசிக்,
கங்கையி னன்னீர் வாசங்கலந்தமெம் பனித் நாடி."

பொ....ரை: பரமாசாரியர் இங்கே இவ்வன்பனை நாம் அடிமை கொள்ளுங்காலம் இதுவேயென்று திருவுள்ளத்தடைத்து, அத்தேவசபையை விட்டு நீங்கி ஸ்நானமண்டபத்தை அடைந்து, குங்குமத்தையும் நாவிப்புழுகையுஞ் சந்தனத்தையு(ங்) குழைத்துத் திருமேனியெங்கும் அர்ப்பணஞ் செய்து நல்வாசனையை ஊட்டிய கங்கா தீர்த்தத்தினாலும் நொய்மையாகிய பனிநீரினாலும் ஸ்நானங் செய்தருளி.
(திவ்வியமென்னும் வடமொழி ஈண்டுத் தெய்வமென்றாயிற்று.)

48. "மெய்ப்புன றுகிலான் மாற்றி விலைமதிப் பில்லா நல்ல
வொப்பருஞ் செம்பட் டாடை யுடுத்துயர் கோட்ட மெய்திச்
செப்பிள முலையாள் பாகன் றென்றிசை யதனை நோக்கி
யப்பெருந் தவீசின் மேலங் கழகுற விருந்த பின்னர்."

பொ...ரை: கடைந்த நவரத்தினச் செப்பை நிகர்த்த இளமையாகிய தனங்களையுடைய உமாதேவி பாகராகிய சிவபெருமான், திருமேனியிற் பொருந்திய நீரைத் திருபொற்றாடையினாலே ஒற்றி நீக்கி, விலைமதித்தற்கரிய நல்ல ஒப்பற்ற செம்மையாகிய பட்டுப் பரிவட்டத்தைத் திருவாரையிலே சாத்தி, உயர்ச்சி பொருந்திய தீக்ஷாமண்டபத்தை அடைந்து, பெருமைபொருந்திய அவ்வாசனத்தின் மீதே தெற்குத் திக்கைநோக்கி அங்கே யோகாசனமாக வீற்றிருந்தருளியபின்னர்.

(அங்கழகுற வென்பதற்கு அத்தவிசிற் கழகுபொருந்த எனவும் நோக்கப்பட்ட அத்தென்றிசைக்கழகு பொருந்த எனவும் பொருள் கூறிலும் பொருந்தும். செப்பென வரையாது கூறிலும் கடைந்த நீலரத்தினச் செப்பென்பது ஏற்புழிக்கோடலாற்பெற்றாம். இன்னும் செப்பினமுலை என்பதற்கு ஏனைய மகளிர் முலை போலாகாது என்னும் ஒரே பெற்றியவாய்ச் சாயாத முலையென ஆன்றோர் செய்யும் இளமுலை என்றலும் ஒன்று.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயப் பேரவைப் பெரியார் அமரர் சைவப்புலவர் வித்துவான் திரு. கு. வி. மகாலிங்கம்

சைவப் பெரியார் அமரர் திரு. கு. வி. மகாலிங்கம் அவர்கள் 26-01-2006ல் இறைவனடி எய்திவிட்டார்கள். அவரது இறுதிக் கிரியைகளின் போது இந்து சமயப் பேரவை அடியார்கள் திருமுறைகள் ஓதி வழிபாடு செய்தனர். அது போல் அவரது 31ம் நாள் நினைவுக்கூட்டம் 25-02-2006 கனடாக் கந்தசுவாமி கோயிலில் நடத்தப் பெற்றபோதும் பேரவை அடியார்கள் திருமுறை வழிபாடு நடத்தினர்.

பெரியாரைப் பற்றி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதிய ஒரு சான்றிதழ் பின்வருமாறு:

சிவமயம்

திரு. கு. வி. மகாலிங்கம் அவர்களின் வாழ்க்கை சமயவாழ்க்கை.

புராணபடனம், புராணவிரிவுரை அவரது பொழுதுபோக்கு. நல்ல தமிழறிவும் பண்ணிசையும், அவரது விரிவுரைகளைக் கருத்துக்களாலும் இனிமையாலும் அலங்கரிப்பவை.

அவர் சித்தியெய்திய சித்தாந்தப் பரீக்ஷைகளின் அளவில் அமையாது மிக உயர்ந்தது, இயற்கையாயும் தேட்டமாயும் அவர் பாலமைந்த சமய அறிவு.

ஆங்கில அறிவும், ஆங்கிலப் பத்திரிகைகளில் நீண்டகாலப் பயிற்சியும் குறிப்பிடத் தக்கவை. சிங்களத்திலும் போதிய பயிற்சி உண்டு.

பல திறப்பட்ட திறமைகள் உள்ள திரு. கு. வி. மகாலிங்கம் போல்வாரைக் கண்டுபிடித்தல் அரிதினும் அரிது.

அடக்கமும் பண்பாடும் அவரது ஆத்மீக அழகுகள்.

சி. கணபதிப்பிள்ளை
கலாசாலை வீதி
திருநெல்வேலி
27-4-77





# அருட்கவியார் என் பார்வையில்

திரு. வி. வேலுப்பிள்ளை

அருட்கவி விநாசித்தம்பி அவர்கள் பிறக்கும்போது செல்வந்தரிலர். சாதாரண ஏழை மக்களில் ஒருவரான சீனியர் தம்பதிகளுக்குப் புத்திரராய் பிறந்தார். ஊர்மக்களுக்கும், கோயில்களில் குடிகொண்டிருக்கும் இறைவனுக்கும் தொண்டு செய்யும் சீனியர் ஐயா என்று எல்லாராலும் அன்புடன் அழைக்கப்பட்ட நல்ல மனிதரின் மகனாகப் பிறந்து நல்ல சைவராக வாழமுற்பட்டார் அருட்கவியார்.

நாங்கள் எங்கள் சிறுபராயத்தில் கண்ட விநாசித்தம்பி அண்ணாவைச் சிவந்த மேனியராய்த் திருநீறு தரித்த நெற்றியுடன் தான் கண்டோம். அருணாசல வித்தியாசாலையின் அதிபர் சைவப்பெருந்தகை திரு. கந்தையா ஆசிரியர், காலைவேளையில் பாடசாலைப் பிரார்த்தனை நேரம் "விநாசித்தம்பி தேவாரம்பாடு" என்று கூறியதும், விநாசித்தம்பி அண்ணா இனிமையான குரலில் பக்தியுடன் பாடுவார் அக்காட்சி இன்னும் காட்சியும் கானமுமாய் மனதில் உள்ளது. சிறந்த மாணவராய் கல்வியை முடித்து நின்றவேளை, இரண்டாவது உலக மகாயுத்த காலம் அது. உணவுப் பஞ்சம் காரணமாய் உணவுப்பண்டங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மக்களுக்குப் பங்கீடு செய்யப்பட்டன. அப்டியான ஒரு விற்பனை நிலையம் அளவெட்டி தெற்கில் இயங்கியபோது விநாசித்தம்பி அண்ணாவும் எனது பெரியதந்தையார் மகனான ஐயாத்துரை அண்ணாவும் இணைந்து அந்த நிலையத்தில் தலைவராகவும் விற்பனையாளராகவும் பணிசெய்து வந்தார்கள். இவர்களின் சேவை அன்றைய காலகட்டத்தில் ஊர்மக்களுக்குப் பேருதவியாய் இருந்தது.

பின் சில காலத்தில் இருவரும் நாவலப்பிட்டியில் ஆசிரியக் கடமை ஏற்றார்கள். அப்போதுதான் ஆத்மஜோதி ஐயாவுடன் தொடர்பு கொண்டார்கள். இந்த மூவரும் மூன்றுவிதமான வாழ்வை அமைக்க இறைவன் திருவுளங் கொண்டார் போலும். எனது பெரியப்பா மகன் ஐயாத்துரை குடும்பமாகி நாவலப்பிட்டியிலே தங்கிவிட்டார். ஆத்மஜோதி ஐயா ஆன்மீகத் தேடலில் தன்னை ஆழ்த்திக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அருட்கவியார் அங்கிருந்து வந்து ஆசிரியப் பயிற்சியை முடித்துப் பணியில் தொடர்ந்து இல்லறமும் நல்லறமுமாய் வாழ்ந்தார். "தவம் எனும்பெரிய வித்து "என்ற திருவாதவூர்ப் புராணப்பாடலுக்கமைய, உண்மை நிலையைத் தானும் அறிந்து உலகத்தாருக்கும் அறிய வைக்க முனைந்தார். அந்நாளில் முற்பிறப்புத் தொடராக அம்பாளின் அருள்வாக்குப் பெற்ற ஏழைத்தொழிலாளி மூலம் இவருக்கும் அம்பாள் அழைப்பு விடுத்தாள் போலும். அன்றிலிருந்து இவரிடம் வித்தாகி நின்றதவம், அருள்வாக்காக வளர்ந்து மக்களுக்கு நல்ல வாக்கும் சைவசமய உண்மை விளக்கங்களுடன் கூடிய சமயப் பிரசங்கங் களுமாய், சோதிடக்கலையுமாய் வீடுமனை அமைத்தல் நீர்நிலை கிணறு ஆக்குதல் நூல்நிலையம் அமைத்தல் என்ற பல்வேறு நற்பணிகளாய் இவர் மூலம் அம்மையின் அருள் மக்களிடம் சென்றடைந்தது அன்றைய செய்தி.

ஆசிரியத் தொழில் காரணமாய் பல இடங்களுக்கு மாற்றலாகிச் சென்றாலும் அங்கெல்லாம் இவர் ஆற்றிய தொண்டுகள் எல்லாம் தனிமுத்திரை பதித்த அடையாளங்களாய் இன்றும் உள்ளன. எங்கே மேய்ந்தாலும் கன்றுக்குட்டி தொழு வத்துக்கு வரவேண்டும் என்ற உழவரின் பழமொழிக்கிணங்க, அன்னார் தன் பிற்கால வாழ்வில் தன் ஊருக்குத் தன்னைக் கல்வியில் மனிதனாக்கிய கல்லூரிக்கும் தொண்டாற்ற வந்தார். இதன் பயனாய் எங்கள் அளவையூர் பல வழிகளிலும் பயன்பெற்றது. அவற்றை எல்லாம் பட்டியல் இட்டால் ஒரு பெரும் ஆவணப்பெட்டகமாய் விடும். ஆதலால் ஒரு சிறு குறிப்புகளைத் தர விழைகிறேன்.

அவரின் தொண்டின் சிகரமாய் விளங்குவது, ஆலிலையில் பள்ளிகொண்ட மாயவனுக்கும், அவன் தங்கை நாராயணிக்குமாக அமைத்த நாராயண நாகவரதன் ஆலயமாகும். எங்கள் ஊருக்குள் ஆக்கிரமித்துச் சீறிவந்த சிங்களப்படையின் தலைவன்கூட, தன் பெரும் சேனையையும் அணிவகுத்து வந்த வாகனம் அனைத்தையும் ஒருபால் நிறுத்திவிட்டுத் தன் உடைகளைக் களைந்து, ஒரு பக்தனாய்ப் பெட்டிப்பாம்பு போல் நாகவரதன் ஆலயத்தில் அருட்கவியார் முன் மண்டியிட்டு அருள்வாக்கு வேண்டி நின்ற காட்சியை ஒரு அன்பர் விபரித்தார். பல காலத்தின் பின் தலைநகரில் இருந்து ஊர்போன நம்மூரவர்





அருட்கவியாரிடம் சென்றபோது மேற்படி காட்சியைக் கண்டு வியந்ததாய்ச் சொன்னார். அருட்கவியாரின் பக்தியின் முதிர்ச் சிக்கு முன் எந்த வல்லாளனும் பணிந்துதான் போகவேண்டும் என்ற நியதிபோலும்.

இவரின் அருள்வாக்கிற்கும் சோதிடத் திறமைக்கும், எல்லார் மத்தியிலும் எல்லாத்தர மக்களிடையேயும் உயர்வான மதிப்பு இருந்தது. நம்பிக்கையும் இருந்தது. இதற்கு உதாரணமாய் நடந்த ஒரு சிறிய சம்பவத்தைத் தருகிறேன்.

இது நடந்தது அறுபதுகளில் என்று கொள்ள வேண்டும். அருட்கவியார் இப்போ இருக்கும் வீட்டில் குடிவந்து சில மாதங்கள் என்று எண்ணுகிறேன். இவரின் அருள்வாக்கிற்கும் சோதிடத்திற்குமாய் மக்கள் அதிகாலையில் இருந்தே வந்து இடம்பிடித்த நேரங்கள். யாழ்/பண்டத்தரிப்பைச் சேர்ந்த ஒரு சுங்க உயர் அதிகாரி, தன் தங்கைக்குத் திருமணப் பொருத்தம் பார்க்க விடுமுறையில் வந்தார். வழமையாக வியாழக்கிழமை களில்தான் அருட்கவியாரின் அருள்வாக்கும் சோதிடமும் விசேடமானது என்ற நம்பிக்கை. ஆகவே அதிகாலையில் நான்குமணிக்கு இந்தச் சுங்க அதிகாரி தன் மைத்துனருடன் அருட்கவியார் வீடுநோக்கி சைக்கிளில் புறப்பட்டார்கள். இவரின் மைத்துனரும் ஒரு பிரித்தானிய மோட்டார் கம்பனியின் அதிபர் பதவியில் இருந்தவர். ஆனால் சிறந்த சைவமகன். அதிகாலையில் கடமைகளை முடித்துக் கடவுளை வணங்கிப் புறப்பட்டார். பண்டத்தரிப்பின் கிழக்குப்பகுதியான விளான் கிராமம் ஊடாக அளவெட்டியின் மேற்குப்புறத் தோட்டவெளிப்பாதையில் வந்தார்கள். அப்போ காலைவெளிச்சம் உணர்வான இதமான நேரம். அந்தச் சுங்க அதிகாரி தன் மைத்துனரின் நெற்றியில் திருநீற்றுக்குப் பதிலாக நீலப்பொடியைப் பூசியிருப்பதைக் கவனித்துச் சிரிப்புடன் 'என்ன அத்தான் நீலம் பூசியிருக்கிறீர்கள்' என்று கேட்டார். அருட்கவியாரிடம் முதலில் போய் விட வேண்டும் என்ற அவசரத்தில் வீட்டில் சாமி அறை யன்னலில் வைத்திருந்த நீல டப்பாவில் உள்ள நீலத்தை, வெளிச்சம் இல்லாத அதிகாலையில் பூசியதை எண்ணியவர் வழியில் இருந்த தோட்டக்கிணற்றில் முகம் கழுவிக் கொண்டு முதல் ஆளாய் அருட்கவியார் வீட்டுக்குச் சென்றார்.

- தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயப் பேரவை அடியார்களின் இந்திய திருத்தல யாத்திரை

செ. சோமசுந்தரம்
(பொருளாளர், இந்து சமயப் பேரவை)

மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய் தொடங்கினார்க்கு வார்த்தை சொல்லச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே. (தாயுமானவர்)

இன்று கனடாவில் இருந்து பல அடியார்கள் இந்திய திருத்தலங்களுக்கு யாத்திரை மேற்கொண்டு வருகிறார்கள். கனடா இந்து சமயப் பேரவையை நிறுவிய கர்த்தா ஞானசுரபி ஒரு ஆத்மீக முதிர்ச்சி எய்திய துறவி. இவர் ஒரு பெரும் யாத்திரைப் பித்தரும் ஆவார். இவரின் உள்ளத்தின் ஊற்று. கோயில்களிலே திருமுறைகள் ஓதப்பட வேண்டும், அதன் மூலம் சைவம் விழிப்புணர்ச்சி பெறவேண்டும் என்பதே. ஒருவர் இவ்வுலகில் இருந்து மறைந்த பின்பும் அவருடைய புகழ் நீடித்து நிற்கக் காரணம் அவர் விட்டுச் சென்ற ஆன்மீக அலைகளும் அவருக்கு கிடைக்கும் வாரிசுகளுமே ஆவர். ஆத்மஜோதியின் ஒரே வாரிசு ஆகிய சிவ முத்துலிங்கம் குருவின் ஆசையை செயலில் செய்து வருவது மகிழ்ச்சிக்குரியது. இவர் காட்டும் செயல் திறமையால் இன்று திருக்கோயில்களில் மீண்டும் திருமுறைகள் இடம்பெறுவதையும், அடியார்கள் திருத்தல யாத்திரைகள் மேற்கொள்வதையும் காண்கிறோம். மக்களை நல்வழிப்படுத்த வல்ல திருமுறைகளை ஆத்மீக பசி எடுத்த ஞானசுரபியின் வாரிசுகள் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் பிரதிச் சனிக்கிழமை தோறும் ஆறு வருடகாலமாக பண்ணோடும் பக்தியோடும் ஓதி வருகிறார்கள். இதன் பலனாகவே திருமுறைகளை ஓதிய அடியார்க்கு திருத்தல யாத்திரை கிட்டியது எனவும் கூறலாம்.

சென்ற ஆறுமாத காலமாக பன்னிரு திருமுறைகளை ஓதிப் பூர்த்தி கண்ட விழாவை சைவத்தின் மேல் சமயம் இல்லை என்ற முழு நோக்குடன் சமயப்பணி ஆற்றிவரும் கவிஞர் சைவதுரந்தரர் கந்தவனத்தின் தலைமையில் கொண்டாடி ஆலய பிரதம குரு குணானந்தக் குருக்களின் ஆசியுடன் இரண்டாவது முறையாக, சென்ற 29ம் திகதி 10ம் மாதம் 2005ம் ஆண்டு சனிக்கிழமை இந்து சமயப்பேரவை அடியார்கள் இந்திய திருத்தலயாத்திரை புறப்பட்டார்கள். அடியேனும் பாரியாருடன்





இறையுணர்வு கொண்டு நிறைவான வாழ்வுக்கு அடியார் உறவு வேண்டும் என்ற எண்ணத்துடன் நுளைந்து கொண்டேன். அடியேன் உன் அடியார் நடுவுள் இருக்கும் அருளை புரியாய் (வாசகம்) அடியார்கள் என்பவர் யார்? ஆத்ம பசி எடுத்தவர்களே அடியார்கள். இறைவனது திருஅடியை தலை தாரை போன்று இடைவிடாது சிந்திப்பவர்களே அடியார்கள். மனிதன் உயர்வடைவதற்கு முக்கியமான தடையாக இருக்கும் கோபத்தையும் தான் என்ற அகங்காரத்தையும் ஒதுக்கியவர்களே அடியார்கள். இறைவனது திருஅடியைத் தவிர அவர்களுக்கு உலகில் வேறு உயர்ந்த பொருள் கிடையாது வாய் எப்போதும் இறைவன் நாமத்தையே உச்சரித்துக்கொண்டு இருக்கும். இறையுணர்வில் விருப்பம் ஏற்பட்டு விட்டால் செயலாற்றும்படி யாரும் கூறத்தேவையில்லை. உடையிலும் உருவத்திலும் அல்ல உள்ளத்திலும் உணர்விலும் அன்பு ஊற்றெடுக்க வாழ்பவர்களே அடியார்கள். இறைவனைப் பற்றிய எண்ணங்களும் எமது பக்குவ நிலைக்கு ஏற்பவே வருகின்றன. உள்ளத்தின் தன்மை எதுவோ அதுதான் மனிதனின் தன்மை.

யாத்திரை மூலம் கடவுளை அடைய கடவுளின் அருள் அத்தியாவசியமானது. அலைபாயும் மனத்தை ஒரு நிலைப்படுத்தி இறைவன் மீது சிந்தனையை பதித்து ஆரவாரமாக பதினைந்து அடியார்களும் ஒரே மனத்துடன் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இருந்து விமான நிலையம் நோக்கி மக்ஸ் பேரூந்தில் புறப்பட்டோம். விமான நிலையம் சென்று அடையும் வரை நமக்கு உள்ளும் புறமும் குவிந்து கிடக்கும் மாசினை எரிக்க சிவநாமமந்திரமே நல்வழி என்பதை உணர்ந்து தெளிவாக மனதை தெளிவு பெறச் செய்யும் ஓம் நமச்சிவாய என்னும் மந்திரத்தையும் முத்தி பெற்று திருவடி செல்ல நெறி அளிக்கும் சிவ புராணத்தையும் ஓதிய வண்ணம் விமானநிலையம் அடைந்தோம்.

விமானநிலையத்தில் சுங்க அதிகாரிகளின் பரிசோதனை முடிவுற இறைவன் திருவடியை நோக்கிய யாத்திரைக்காக விமானத்தில் இருந்து ஒக்டோபர் 31ம் திகதி சிவபூமியாகிய பாரத பூமியை சென்றடைந்தோம். அங்கும் சுங்க பரிசோதனைகளை முடித்துக் கொண்டு தங்கப்போகும் இடமாகிய தாம்பரம் சென்றடைந்தோம்.

- தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்காபரோ நகரில் உங்கள் சகலவிதமான தேவைகளுக்கும் அறுசுவை உணவு வழங்குபவர்கள்

நியூ தேவி உணவகம்

இலங்கை, இந்திய உணவு வகைகளிற் கை தேர்ந்த நிபுணர்கள்

தினமும் இடியப்பம் (வெள்ளை, சிவப்பு), பிட்டு, இட்லி, தோசை, வடை, வாய்ப்பன், மோதகம், பற்றிஸ் மற்றும் பல்வேறு உணவுகளை காலை 9:00 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை சுடச்சுட பெற்றுக்கொள்ளலாம்

விரத நாட்களில் விசேட மரக்கறிகளுடன் வடை பாயாசமும் பரிமாறப்படும்

1877 Lawrence Ave. East, Scarborough, ON
(Lawrence & Pharmacy)
Tel: 416-288-0303

Dr. Shan A. Shanmugavadivel & Associates
டாக்டர் அ. சண்முகவடிவேல்
Orthodontics Implants
பற்களுக்கு கிளிப் போடுவதிலும் Implant பல் கட்டுவதிலும் பயிற்சி பெற்றவர்
RAINBOW VILLAGE DENTAL OFFICE
2466 Eglinton Avenue East, Unit:7
Scarborough, Ontario, M1K 5J8
Monday to Saturday
Near Kennedy Subway (Rainbow Village Building)
416-266-5161
MAIN SQUARE DENTAL OFFICE
7-2575 Danforth Avenue, Toronto, ON. M4C 1L5
Mon, Tues, Wed, Thurs, Fri, Sat & Sun - Near Main Subway
Dr. Shan - (Wedn), Dr. Kalaichelvan (Thurs & Sun)
(Free consultations on alternate Sundays)
Dr. Yao San Other days)
416-690-0121





## இந்து சமயப் பேரவைச் செய்திகள்

### தமிழீழ மக்களுக்காக ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை(கனடா) நடத்திய வழிபாடு



அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் 18-02-2006 சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை தமிழ் ஈழ மக்களின் நல்வாழ்வு குறித்து அகண்ட நாமப்பஜனையும் கணபதி ஓமமும் நடைபெற்றன.

பேரவையின் திருக்கூட்டத்தைச் சேர்ந்த திருமுறை ஓதும் அடியார்களும், ஈழமக்களின் நல்வாழ்வு குறித்த நலன் விரும்பிகளும் பெருந்திரளாக அகண்டநாமப் பஜனை வழிபாடுகளில் கலந்து கொண்டனர்.

கணபதி ஓமம் ஐந்து அந்தணப் பெருமக்களால் மிகவும் சிறப்பாக நடத்தப்பட்டது. விசேட அபிசேக ஆராதனைகளும் இடம்பெற்றன.

மேற்படி நிகழ்ச்சி பேரவையின் காப்பாளர் சைவதுரந்தரர் வி. கந்தவனம் அவர்களின் தலைமையில் பேரவையின் உதவிச் செயலாளர் சிவமுத்துலிங்கத்தின் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகவிழா

04-01-2006 தொடக்கம் 13-01-2006 வரை திருவெம்பாவை காலத்தில் அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் ஐந்தாவது வருடமாக 10 நாட்களும் காலை தொடக்கம் மாலை வரை திருவாசகம் முற்றோதல் நடைபெற்றது. பேரவையின் திருக்கூட்டத்தில் பலர் பக்திசிரத்தையுடன் கலந்து கொண்டனர்.

ஆருத்திரா தரிசனத்தன்று திருவாசகம் முற்றோதி திருவாசகவிழா நடைபெற்றது. விழாவிற்கு பேரவையின் காப்பாளர் சைவதுரந்தரர் வி. கந்தவனம் அவர்கள் தலைமைதாங்கினார். பேரறிஞர் முருகவே பரமநாதன், சிவமுத்துலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.



திருவாசகம் முற்றோதலுக்கு ஒழுங்காக வரவு தந்தமைக்காக கேடயம் பெற்றவர்கள்

முற்றோதல் நடைபெற்ற 10 நாட்களும் ஒழுங்காக வரவு தந்தமைக்காக எட்டு சிவனடியார்கள் பாராட்டுக் கேடயம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். பங்குபற்றிய அடியார்கள் யாவருக்கும், சான்றிதழ்களும் புத்தகப் பரிசில்களும் வழங்கப்பட்டன. விசேட அபிசேக ஆராதனைகளும் பக்தி சிரத்தையுடன் நடைபெற்றன.







திருவெம்பாவை காலத்தில் திருவாசகம் முற்றோதலுக்கு ஒழுங்காக வரவு தந்தமைக்கான கேடயம் வழங்கும்பொழுது



திருவெம்பாவை காலத்தில் திருவாசகம் முற்றோதலில் பங்குபற்றியமைக்கான சான்றிதழ் வழங்கும்பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடைச்சுவாமியின் குருபூசை



பூரண சித்தர், மகாஞானி எனப் போற்றப்படும் யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்த குடைச் சுவாமி (கந்தையாச் சுவாமி) அவர்களின் குரு பூசை சுவாமிகள் அவர்கள் சமாதியடைந்த கார்த்திகை நட்சத்திரத்தில் 05-03-2006 ஞாயிற்றுக்கிழமை நல்லூர் முருகன் ஆலயத்தில் கொண்டாடப்பட்டது. பேரவையின் அடியார்கள் திருவாசகம் முற்றோதினர். விசேட அபிசேக ஆராதனைகளும், மகேஸ்வர பூசையும் (அன்னதானமும்) இடம்பெற்றன.

பேரறிஞர் முருகவே பரமநாதன் சிவ முத்துலிங்கம் இளைப்பாறிய ஆசிரியை சியாமளா ஆறுமுகம், க. வித்தியானந்தன் ஆகியோர் சுவாமிகளைப் பற்றி நினைவுரைகள் நிகழ்த்தினர். பேரவையின் பொருளாளர் செ. சோமசுந்தரம் ஆசிரியர் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். பேரவையின் உதவிப் பொருளாளர் க. வித்தியானந்தன் குடும்பத்தினர் மற்றும் சுவாமி களின் அடியார்களின் ஆதரவில் இந்துசமயப் பேரவையினரால் இக்குருபூசை நடத்தப்பட்டது.

**S & S Engravers**

**வெற்றிக் கேடயங்கள், பெயர்க்கோர்வைகள், வாழ்த்து மடல்கள், அனைத்தும் உங்கள் தேவைகேற்ப**

**குறைந்த விலையில்**
**நிறைந்த தரத்தில்**




Name plate, Plaques, Awards, Directional Signs, Logos, Donor Recognition, Systems & Panels, Tropbies, Medals & Ribbons

**285 Progress Ave. #08**
**Scarborough, Ont.**
**Tel: 416-335-6819, Cell: 416-875-3500**
**Fax: 416-609-0272**





## கிடைக்கப் பெற்றோம்

### யாழ். மயிலங்கூடல் அருள்மிகு ஞானவயிரவ சுவாமி அருள்விருத்தம்

யாழ். மயிலங்கூடல் அருள்மிகு ஞானவயிரவ சுவாமி மீது அருள்விருத்தப் பாக்களைப் பக்தியுடன் பாடியளித்திருக் கின்றார் கலாபூஷணம், பண்டிதர் சி. அப்புத்துரை அவர்கள்.

இது ஆலயத்தின் நான்காவது கும்பாபிடேக நாளாகிய 30-03-2005ல் நூலாக வெளியிடப்பட்டுள்ளது. ஞானவயிரவர் பண்டிதர் அவர்களின் குலதெய்வம். போர்ச்சூழல் காரணமாக அவர் கொழும்பில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் வயிரவப் பெருமான் அவர் சிந்தைகலந்து அருள்பாலித்த வண்ணம் இருக்கின்றார். அவர் அருளால் அவர்தாள் வணங்கி ஆக்கிய அருள்விருத்தத்தை அவர்தாள்களுக்கே அர்ப்பணித்திருக்கின்றார், ஆன்ற புலவர் அப்புத்துரை அவர்கள்.

நூலுக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் அருளாசிச் செய்தி வழங்கியிருக்கிறார்கள்.

அருள்விருத்தம் 100 அறுசீர் விருத்தங்களாலானது. வயிரவப் பெருமான் சிவமைந்தர் - சிவசொரூபி. பண்டிதர் அவர்கள் சிவபெருமானாகவே வயிரவப் பெருமானை நம் முன் நிறுத்துகின்றார். விருத்தங்கள் ஆற்றொழுக்குப் போலப் பத்திச் சுவை நனிசொட்டி நிற்கின்றன. நூறுக்கும் ஒரு பாடல் பதம்:

கங்கையைச் சடையில் வைத்துக்
  கருவிடங் கண்டத் தேற்றுத்
திங்களை முடியிற் சேர்த்துத்
  தீந்தமிழ் மொழியை ஆய்ந்து
மங்கைநே ரிலாதாள் வந்தி
  மனையுதிர் பிட்ட ருந்தித்
தங்கினை மயிலங் கூடல்
  தண்ணளி யருள வேண்டும்.

பத்திச் சுவையுடன் மயிலங்கூட்டலூர் இயற்கையழகையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலிலே கொலுவேற்றியிருக்கிறார் பண்டிதர்.

கடுஞ் சொற்களுக்குப் பொருள் தந்திருப்பது பாடல்களை நன்கு விளங்கிச் சுவைக்க உதவவல்லது.

நூலின் இறுதியில் ஆலயத்தின் திருவூஞ்சலும் வரலாறும் சேர்க்கப்பட்டுள்ளன.

யாழ்.மயிலங்கூடல் அருள்மிகு ஞானவயிரவ சுவாமியைப் பக்தி இலக்கியத்திற் பவனிவரச்செய்த பண்டிதர் சி. அப்புத்துரை அவர்களின் பணி காலத்தை வெல்லவல்ல பைந்தமிழ்ப் பணியாகும்.

- வி. கந்தவனம்

## கடிதங்கள்

### வல்லிபுரமாயன் கோவை

ஈழமணித்திருமண்ணில், திருமால் கோயில் கொண்ட தலங்களில் ஒன்று வல்லிபுரக்கோயில் வல்லிபுரத்து மகத்துவத்தைப் பலபிரபந்தங்களில் வடித்தும், வடிப்பித்தும் பல பிரபந்தங்களை வெளியிட்டவர் அம்மண்ணின் சொந்தக்காரர் பேரறிஞர் முருகவே பரமநாதன். அன்னவரின் தூண்டுதலாற் பெரும்புலவரும், ஆங்கிலம் தமிழ் இரண்டிலும் விற்பன்னரும், பல பிள்ளைத்தமிழ்களின் ஆசிரியருமான பிள்ளைக்கவி வல்லிபுரம் சிவராசசிங்கம் அவர்கள் பாடிய (வடித்த) வல்லிபுரமாயன்கோவை அண்மையில் ஆழ்வார் சுவாமி ஆலய அறங்காவலர் சபையால் வெளியிடப்பட்டுள்ளது. இப்புனித பிரபந்தத்தை பின்வரும் முகவரியிலும் ஆலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

V. Sivarajasingam<br>
Kanchchiyan Thoddam<br>
Karaveddi East<br>
Karaveddi<br>
Sri Lanka





ஆத்மஜோதி ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்.

ஆத்மஜோதி ஐயா அவர்களின் பத்தாவது ஆண்டுமலர் கிடைத்தது. நன்றி.

இப்படியான நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவும் தொண்டும் துணையுமாக இயங்கவும் ஆவல். ஆனால் உடல்நிலை வயது பிரயாணவசதி காலநிலை கைகூடுவதில்லை.
நாடறிந்த நல்லவர். பல ஏடுகள் போற்றும் உத்தமர். ஆனால் ஆத்மஜோதி ஐயா பட்டம் பதவியை விரும்பாத பண்பாளர்.

இவரைப்பற்றி நான் அறிந்தது சொற்பம். அதாவது 1937ஆக இருக்க வேண்டும். அதைக் கூறுவதில் பெருமை அடைகின்றேன். பண்டிதமணி திரு. கணபதிப்பிள்ளை, திரு. கைலாசபதி இவர்களுக்கு சிறுவராகிய நாங்கள் செய்த தொண்டுகளை இவர் செய்யத் தொடங்கிவிட்டார்.

நான் திருநெல்வேலி முத்துத் தம்பி வித்தியாசாலையில் அநாதைவிடுதியில் படித்தகாலம் ஐயா அவர்கள் ஆசிரிய கலாசாலைக்கு ஆசிரியர் பயிற்சி பெற அனுமதி கிடைத்து வந்தார். அப்பொழுது உடுத்தி வந்த மாதிரியான உடையையே கடைசிவரை தொடர்ந்து உடுத்தி வந்தார். கதர் உடை, உத்தரிய மடிப்புச் சால்வை. கன்ன உச்சி, நெற்றியில் மூன்று குறி விபூதிப் பூச்சு, சந்தணப் பொட்டு. புன்சிரிப்பு இதுவே அடையாளம்.

கனடாவிலும் அப்படியே கண்டேன், கதைத்தேன், சொற்ப நேரம். கடைசியாகக் கண்டது மரண ஊர்வலத்திலும் கிரியைகளிலும் தான்.

இதன் பின்னர் இவரைப்பற்றி திருச்சி, கொழும்பு, நாவலப்பிட்டி, கண்டி மாத்தளை மற்றும்மலையக மக்களுடன் உரையாட நேர்ந்தால் மறக்காமல் கேட்பது, முத்தையா மாஸ்ரரைத் தெரியுமா? என்பதே.

ஓம் நன்றாகத் தெரியும். அவரிடம் படித்தோம். அவரால்தான் நல்ல தூய தமிழ் படித்தோம். சைவமும் படித்தோம் எஸ்ரேற் மலையக மக்களின் கண்ணைத் திறந்தவர். அதனால்தான் முதலாளியாய் தொழிலாளியாய் பல விபரம் அறிந்தவர்களாய் இருக்கின்றோம் என்றார்கள்.

இவ்வார்த்தைகள் எனக்கு மேலும் அவர் மேல் பற்றும் பாசமும் அபிமானமும் கூட்டியது. புத்தகம் பென்சில் இல்லையென்றால் தன் பணத்திலேயே வாங்கித் தருவார். அழுக்கு உடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுத்திப்போனால் அதையும்கூட வாங்கித்தருவார்.

அவர் சாப்பிடும்போது நாங்கள் மறந்தும்கூட அவர் கண்ணில் படமாட்டோம். ஏன்? எச்சில் கையால் காகம் துரத்தாதவரா? ஐயோ! அப்படியில்லை. கூப்பிட்டு ஒருபிடியேனும் தராமல் சாப்பிடவே மாட்டார். எங்களிடம் ஒரு ஏவல் வேலையும்கூடச் சொல்லமாட்டார். எங்களிடம் இரக்கம் உள்ளவர்.

இவற்றை எல்லாம் எனது நண்பர் கொழும்பு முதலாளி கிருஷ்ணன், அவர் மனைவி. ஆசிரியர் ராசு M.A. கரியமாணிக்கம் திருச்சி இன்னும் பலர் மூலமாகக் கேட்டறிந்தேன்.

இதுமட்டுமல்ல தோட்டப்பகுதிக்கு யாழ்ப்பாணத்து ஆசிரியர்கள் பணியாற்ற வந்ததன் பின்னர்தான் தமிழ் படிப்பறிவு கூடியது. அதிலும் முத்தையா ஆசிரியருடைய அன்பு, அரவணைப்பு அறிவுரை படிப்பித்தல் ஏழைக் குடிமனைகளில் புகுந்து உரையாடி மகிழ்ச்சியூட்டல் பல மடங்கு. இவரை அறியாத மலையக மக்கள் குறைவு என்று பெருமையாகக் கூறுவார்கள்.

இத்தொண்டுகளின் போற்றுதலும் வாழ்த்துதலுமே ஆன்மீக வள்ளலாய், ஆசிரியராய் ஆத்மஜோதியாய் ஞானசுரபியாய் பிரகாசிக்க இறைவன் வழிகாட்டியுள்ளான். இல்லற ஞானி ராமச்சந்திராவினது உதவியும்கூட அவருக்கு இருந்தது. மலரில் கண்ட கட்டுரைகள் பிரமாதம். உங்கள் தொண்டுக்கும் என் பாராட்டுகளும் கூடவே.

என் அன்புப்பங்களிப்பாக இச்சிறு தொகையை $50.00 செக் அனுப்பிவைக்கின்றேன். வளர்க நற்தொண்டுகள்.

வணக்கம்

இப்படிக்கு
சதாசிவம் சேவியர்

## சேக்கிழார் விருந்து

சிவமயச் செல்வி மாதாஜி புலவர் சி. விசாலாட்சி எழுதிய சேக்கிழார் விருந்து என்ற நூல்கிடைக்கப்பெற்றோம். திருத்தொண்டர் புராணத்தில் எழுதப்பட்ட 63 நாயன்மார்கள் 9 தொகையடியார்களின் வரலாற்றை குறிப்பிடும் இந்நூல் பெரியவர்களில் இருந்து சிறியவர்கள் வரை படித்து இன்புறத்தக்கது.





# Life of Sambanther - Part 2 His Compassion

Seeniappah Rajaratnam

As a young boy his heart felt for the suffering of others. He never asked anything for himself, his whole life was a series of pleading on others behalf. He pledged for the relief of the daughter of Kolli chief Malavan, for the relief of his followers from the severity of the winter cold at Thiruvottur. He made the male palm trees bear fruits. Lastly to restore life to Poompavai at Mylapoor from her ashes preserved one year by her father. When her father requested him to marry her, he refused, saying that he considers her as his daughter because he brought her back to life.

In another incident his parents wanted him to marry Soukiyar, at first he refused and later summate himself knowing that it is the will of God. As revealed by Lord Siva, his very end is also significant. He took all the assembled to witness his wedding. They all entered into divine effulgence, which let up the temple as he himself with his bride.

He had sung about 384hymns containing 4181 verses. In many of his hymns there were 11 verses and in others there were 7, 8, 9 or 10 verses. He had mentioned his name in all his hymns except in two of them. He was associated with other saints like St. Thiunavukarasar, Thiruneelakanda Yalpanar, Muruganayanar, and Siruthondar. He immortalised Mangayarkarasi by his hymn.

His songs were simple, sweet, natural and spontaeous filled with substance and imagination. His songs reveal his experience in sangam literature, and a good knowledge of Thirukural. His description of the natural beauty surrounding the holy temples is blissfull. ‘Vandupada mayil adha mankandu thulla vary kendiapaya’is a good example. One should have a good knowledge of Tamil language in order to experience the bliss of his songs.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FORM OF HIS SONGS

In every first seven of his verses he sings of the deity of the temple and its natural setting. In very eighth verse he sings of Ravanass egotism, his regrets and realisations of Lord Siva and His grace.

In his ninth verse he sings in praise of Lord Siva, and the failure of Brama and Vishnu to find the head and feet of Lord Siva. In his tenth verse he ridicules acetic life.

In his eleventh verse he calls himself as Thamil Ganasambanther, along with the place of his birth and the temple of his worship. The merit of his hymns is healing the sufferings of people. He sets new tradition adding the lustre to old tradition, it is called as Thirukadai kappu.

Today parents as well as Tamil teachers make children to memorize these songs for their daily prayers.

In his Song ’Manil nalla vannam valalam’ he points out that married life is superior, than acetic life. This song is fit to be sung at weddings.

In his Hymn ‘Veyuru thoolipankan’ he says that because God has entered his heart, all planets will ‘be good and do good’ for him. His songs are capable of performing miracles. He also revived the Tamil culture that degenerated under the invasion of Pallava kings in Tamil Nadu. He awakened the people to God consciousness and a deeper faith in Savaism, and brought the kings and people from darkness to light and was a revolutionary son of God.

St.Sambanther lived only for the sixteen years. During this short span of time he has sung more hymns and performed more miracles than all the other three. His songs possessed authority arising out of inner strength. There is always in his life humility and absolute surrender, which are the marks of his divinity. With his Bakthy songs he moved through thick and thin more easily than many other saints.

His song on Thiruneeru was at its best, its power of healing is unknown to the world at large.





The last powerful song was on ‘Namasivaya’, which is the sum total of all the Vedas. He had a very good knowledge of the Vedas.

Swamy Sivapragasar in his songs says the hymns of St. Sambanther had made male palmyrah trees into female trees to yield fruits, it is a peacock to heel the poison of snakes, can bring life to hones, and is medicine to diseases.

His Hymns are the first second and the third in Thirumurai regularised and compiled by Nambiandar Nambi. In Periyapuranam half of it contains the hymns of Thirugnana Sambanther. He appointed Thiruneelakanda Yalpaner as the director of music, a decendent of his called as Padini, was responsible for the continuity of Bakthy songs from generation to generation. Adi Sankarar the greatest philosopher of all times has characterized Thirugnanasambander as a dravidian infant. As a child he experienced the love, grace, and beauty of God, which is purity of mind.

His songs excelled in composing music. He referred himself as Tamil Gnana Sambanther in as many as 45 hymns. His hymns came out like pouring rain and possessed verity and style in composition. Following the old tradition, he added a new tradition ornamental to the Tamil language. In more than 36 times he praised the Tamil Language giving lustre to it. In one of his verses he says ‘O’ mind remember God daily at length, who knows how long we are going to live and die, to Lord Siva carry basket of lowers, listen to the name of the God to gain the fruits of good deeds, praise the name of the lord, and repeat the name of Siva.

A message

Even those who kill, or who do not have good deeds, god will remove their sins , if they would utter the good name of Namasivaya.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### குப்பிளான் சைவசித்தாந்த சிகாமணி

# மகான் காசிவாசி சி. செந்திநாதையர்

புலவர் சி. விசாலாட்சி (மாதாஜி)

**தோற்றுவாயும் பிறப்பும் இளமையும்**

ஈழத்தின் வடபால் உள்ள யாழ்ப்பாணம் என்ற நகரம் ஈழத்தின் சிகரமாகும். இச்சிகரத்தின் ஒளிவிளக்காகக் காணப்படுவது குப்பிளான் என்ற புனித கிரமமாகும். புறமதங்கள் ஆலயங்கள் தீண்டாது பக்தி வளம்மிகுந்த இக்கிராமத்தில் குப்பிளான் சொக்கவளவு அருள்மிகு சோதிவிநாயகப் பெருமானின் அருளால் சைவப்பண்பாடு கொண்ட அந்தணர்மரபில் சின்னையா கௌரியம்மைக்கு 1848ம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் செந்திநாதையர் அவர்கள் தோன்றினார். பிராமணப் பிள்ளைகட்குச் செய்ய வேண்டிய கிரியைகள் முடிந்தபின் புன்னாலைக்கட்டுவனிலுள்ள மாமனாருடன் வாழ்ந்தார்.

அந்தச் சிறுவயதில் அவர் தன் தாய்மாமனாரிடம் வடமொழி, தென்மொழி என்பவற்றை முறையாகக் கற்றுச் சிறந்த வித்தகராக விளங்கினார். அவர் பத்து வயதுக்குள் வடமொழி தமிழ் மொழிகளில் போதியளவு அறிவைப் பெற்றார்.

பெற்றோர் அந்த வயதில் ஐயருக்கு ஆங்கிலக் கல்வி படிப்பிக்க விரும்பி யாழ்ப்பாணத்தில் உள்ள மத்திய கல்லூரிக்கு ஆங்கிலம் கற்பதற்காக அனுப்பினார்கள். மத்திய கல்லூரியில் திறமைவாய்ந்த ஆசிரியர்கள் கல்வி கற்பித்தமையால், ஐயர் அவர்கள் தமது இருபதாவது வயதில் ஆங்கிலக் கல்வியில் போதிய திறமை அடைந்தார்.

அதன் பின்னர் மீண்டும் பல பெரியார்களையும் கல்வி மான்களையும் தேடிச் சென்று முறையாகத் தமிழ் கற்றமையால் ஐயர் அவர்களுக்குப் பெரியபுராணத்தில் மிகுந்த விருப்பமுண்டு. அதனால் ஐயரவர்கள் தமது இருபத்திரண்டாம் வயதில் பெரியபுராண வித்தகராக விளங்கினார்.

இதனால் ஐயரவர்கள் பெற்றாருடன் தேவார முதலிகள் தரிசித்துத் தேவாரப் பதிகங்கள் பாடிய தலங்கள் தோறும் தலயாத்திரை செய்தார். 1871ல் திருச்செந்தூர் முருகப் பெருமானின் கந்தசட்டி விழாவில் முருகப் பெருமானை உள்ளமுருகப் பிரார்த்தனை செய்து முருக பக்தரானார்.





**ஆசிரியத் தொழிலும் இலங்கை நேசன் பத்திரிகையும்**

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் செந்திநாதையரின் கல்வித் திறமை கண்டு தமது சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஐயர் அவர்களை ஆசிரியராகக் கடமைபுரிய ஏற்றுக்கொண்டார். நாவலர் பெருமானின் மதிப்பைப் பெற்றார். நாவலர் பெருமானின் நிழல்போல அவர்கள் பின்னே சென்று, நாவலர் பெருமானின் பிரசங்கங்களைக் குறிப்பெடுத்தார். அக்காலத்தில் காணப்பட்ட புறச்சமயங்களைக் கண்டித்துக் கண்டனங்கள் எழுதி வந்தார்.

அக்காலத்தில் 1877ல் சின்னத்தம்பி என்பவர் மாதம் இருமுறை இந்துநேசன் என்ற சஞ்சிகை ஒன்றை வெளியிட்டு வந்தார். அப்பத்திரிகையில் நாவலர் பெருமானின் பிரசங்களின் குறிப்புகளும் புறமதக் கண்டனங்களும் எழுதி நன்மதிப்புப் பெற்ற செய்திகள் பலவாகும்.

ஐயரவர்கள் நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த விசுவநாதஐயரின் மகள் சிவகாமியைத் திருமணம் செய்துமீனாட்சி என்னும் பெண்குழந்தைக்குத் தந்தையானார். சிலநாளின் பின் மனைவியார் அமரத்துவம் அடைய மீண்டும் தலயாத்திரைகள் செய்து பண்ணிசையும் சாரங்க வாத்தியமும் கற்றார்.

ஆசிரியத் தொழிலை நாவலர் பெருமானின் விருப்பத்தோடு நீக்கிவிட்டுக் கல்வி கற்பதற்காக வடஇந்தியா சென்று கன்னியாகுமரிவரை யாத்திரை செய்தார். நாவலர் பெருமான் வழிநின்று ஆங்காங்கு சைவப்பிரசங்கள் செய்து நன்மதிப்பைப் பெற்றார். தமிழ்நாட்டு அறிஞர்கள் ஐயரவர்களின் பிரசங்கங்களால் ஈர்க்கப்பட்டு ஐயரவர்களைப் பாராட்டினார். ஐயரவர்கள் சிறப்பாக நாவலர் பெருமானின் நன்மதிப்புக் கடிதம் ஒன்றை இந்தியாவில் இருந்தகாலத்தில் பெற்றுப் பதில் எழுதுமுன் நாவலர் அவர்கள் அமரத்துவம் அடைந்தமை செவியுற்று மிகவும் வருந்தினார்.

**ஐயரவர்கள் பெற்ற தீட்சைகள் முதலியன**

ஐயரவர்கள் சைவசித்தாந்த நெறியில் வாழ்ந்தமையால், பிரவேசதீட்சை, விசேட தீட்சை(சிவ தீட்சை) ஆச்சாரியாபிடேகம் என்பவற்றைத் தகுதியான குருவாகிய திருப்புகலூர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர சிவாச்சாரிய சுவாமிகளிடம் பெற்றார். ஒரு நல்ல வேளையில் நிர்வாண தீட்சை முதல் பல உபதேசங்களையும் பெற்றார்.

இதன்பின்னர் ஐயரவர்கள் தனது பிறந்த இடத்திலும் (குப்பிளான்) அயலூர்களிலும் கால்நடையாக நடந்து பிரதிபலன் கருதாது சைவப்பிரசங்கள் செய்தார். ஐயரவர்கள் முருகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமான்மீது கொண்ட பக்தி மிகுதியால் கந்தபுராணம் பற்றித் தெவிட்டாத் தேனாகப் பேசுவார். பிரசங்கம் செய்யும் தோறும் கண்களால் கண்ணீர் பெருகக் காதலால் கசிந்துருகி அவர்செய்யும் பிரசங்கத்தைச் செவிமடுத்த சேர் பொன் அருணாசலம் அவர்கள் கந்தபுராணம் பற்றி எழுதும்படி ஐயர் அவர்களை அன்பாகப் பணித்தார்கள். இப்பணியைச் சிரமேற்கொண்ட ஐயரவர்கள் கந்தபுராண 'நவநீதம்' என்னும் நூலை எழுதினார். அதன் அச்சுப்பதிவுக்குச் சேர் பொன் அருணாசலம் அவர்கள் போதிய பொருளுதவி செய்தார்.

இவ்வாறு ஐயர் அவர்கள் யாராலும் செயற்கரிய நீலகண்ட பாடிய மொழிபெயர்ப்பு நூலை மிகமிகச் சிரமப்பட்டு எழுதினார். இதன்விரிவு மிகமிக ஆழமானது ஆகும். பல நூல்களை எழுதி கலாநிதிப் பட்டங்களும் பாராட்டுக்களும் பெற்றார்.

ஐயரவர்களின் குரல்வளம் தெவிட்டாத்தேன் போன்றதாகும். அவர்கள் திருமுறைகளின் தேவாரங்களைப் பாடிப்பிரசங்கம் செய்வதோடு நில்லாது தேவாரம் வேதசாரமென சைவ உலகில் எடுத்துக்காட்டுடன் நிலைநிறுத்திய பெருமை ஐயரையே சாரும். ஐயரவர்கள் சைவசித்தாந்தம் பதினான்கும் நன்கு கற்று சைவசித்தாந்த சிகாமணியெனப் பட்டமும் விருதும் பெற்றார்.

ஐயரவர்கள் பல நூல்களை எழுதினார். ஒரு சிலநூல்கள் வெளிவந்தன. ஸ்ரீ சீகாழிப் பெருவாழ்வின் சீவகாருண்யமாட்சி, சிவலிங்க மகத்துவம், திருநீற்றின் உண்மை ஞானரத்தினாவளி, முதலிய நூல்கள் ஏகம்பர முதலியாரவர்களின் முயற்சியால் அச்சிடப்பட்ட வையாகும்.

**மறைவு**

ஐயரவர்கள் எழுபத்தாறு ஆண்டுகள் வாழ்ந்தவர். அவர் தம் வாழ்வின் பெரும்பகுதியைத் தமிழ்நாட்டில் சைவத்துக்காக வாழ்ந்து கழித்தவர். சைவத்திற்கும் சைவ சித்தாந்தத்திற்கும் உறுதுணையான வடமொழி நூல்களைத் தொட்டுக்காட்டியவர். சைவசமயக் களைகளை அகற்றிச் சைவசமயத்திற்காக வாழ்ந்து காட்டிக் குப்பிளான் பூமியில் புறசமயங்கள் தீண்டாவண்ணம் பேணியவர். திருநீற்றின் ஒளியும் திருவைந்தெழுத்தின் ஒலியும் தமிழ்நாட்டிய சிவபக்தியும் வானோங்கச் செய்து குப்பிளானை திருப்பரம் குன்றமாக்கி திருப்பரம் குன்றத்தில் ஆச்சிரமம் அமைத்து தவவாழ்வு வாழ்ந்து சமாதியடைந்தார். இன்றும் குப்பிழான் சைவமகாசபையினரால் அமைக்கப்பட்ட ஐயரவர்களின் ஞாபகச்சிலை குப்பிளானில் திருப்பரம் குன்றமாக இருக்கின்றது.

வாழ்க சைவம்! வளர்க அவர் புகழ்.
ஓங்குக உலகமெல்லாம் சைவநீதி.





## ஈழத்துச்செய்திகள்

## சந்நிதியான் ஆச்சிரமம்

தொண்டமனாறு சந்நிதி ஆலய ஆனந்தா ஆச்சிரம மயில்வாகனம் சுவாமிகளின் சீடனான மோகனதாஸ் சுவாமிகள் சந்நிதியான் ஆச்சிரமத்தை அமைத்து அளப்பரிய பணிகளை ஆற்றி வருவது சகலரும் அறிவர். நித்திய அன்னதானப்பணி சந்நிதி ஆலய வளாகத்தில் வாழும் முதியோர்களுக்கு, மூன்று நேர உணவு, உடை, வைத்தியவசதி அளித்தல், வாரத்தில் இருநாட்கள் ஏழைகளுக்கு இலவச வைத்தியசேவை, வடமராட்சியில் வறுமைக் கோட்டுக்குள் வாழும் ஏழைகளுக்கு மாதாந்த நிவாரணநிதி, ஏழை மாணவர்களுக்கு, புத்தகம், உடை, துவிச்சக்கரவண்டி போன்றன இலவசமாக அளித்தல் போன்ற உன்னத பணிகளை ஆற்றிவரும் சந்நிதியான் ஆச்சிரமம் கடந்த ஒன்பது வருடங்களாக ஆச்சிர மத்தின் கிளை நிறுவனமாகிய சைவ கலைப்பண்பாட்டுப்பேரவை ஊடாக ஞானச்சுடர் என்னும் மாதாந்தப் பத்திரிகையை நடத்தி வருகின்றது. பல விழாக்களையும் குருபூசைகளையும் நடத்தி வருவதுடன் வெள்ளிக்கிழமை தோறும் பசனையையும், ஆன்மீகச் சொற்பொழிவுகளையும் நடத்தி வருகின்றது.

அவர்களின் உயர்ந்த பணிகளுக்கு மகுடம் வைப்பதுபோல செல்வச்சந்நிதி ஆலயத்தில் வாழ்ந்த சித்தர்கள் யோகிகள் மற்றும் அருளாளர்களின் வரலாறுகளை ஆவணப்படுத்தும் நோக்கத்துடன் நூல் உருவில் வெளியிட உள்ளனர். இவ் உன்னத செயலினால், ஈழத்து அருளாளர்களின் வரலாறுகள் வெளிவருவதுடன் சந்நிதி முருகப்பெருமானின் அருட்பிரவாகங்களையும், அற்புதங்களையும் உலகம் வாழ் சைவத்தமிழ் மக்கள் அறியக்கூடியதாக இருக்கும். வாழ்க அவர்களின் தொண்டு! வளர்க அவர்களின் பணிகள்.

## ஈழத்துச் சிவாலயங்கள்

ஈழத்து ஆலயங்களின் வரலாறுகளை அறிஞர் பெருமக்களின் வழிகாட்டல் துணையோடு ஈழத்துச்சிவாலயங்கள் என்ற தலைப்பில் ஒரு தொகுப்பு மலரை வெளியிடுவதற்கு எங்கள் சபை தீர்மானித்துள்ளது. திருமதி. வசந்தா வைத்தியநாதன் இம்மலரின் ஆசிரியராக இருப்பார்.

300 பக்கங்களில் படங்கள் ஆட்பேப்பரில் போடப்பட்டு நூலால் கட்டி வெளிவர கவர் (cover) மட்டையோடு தரமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாக வெளிவர 500 புத்தகத்திற்கு 1,50,000 ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சிவகைங்கரியம் நிறைவேறுவதற்கு நிதியுதவி புரிய விரும்புவோர் பின்வரும் எமது முகவரிக்கோ அல்லது எமது வங்கிக் கணக்கிற்கோ அனுப்பி வைத்தால் பெயர் விபரங்கள் யாவும் வெளிவரும் மலரில் வெளியிடப்படும், மலரும் அனுப்பி வைக்கப்படும் என்பதையும் அறியத்தருகிறோம்.

A/C: 093-005841-6 H.N.B
Dehiwella

T.Thurairajah
31A, Janaki Lane,
Bambalapitiya,
Colombo-04
Sri Lanka

த. துரைராசா
பதிப்பாசிரியர்

## துர்க்கா மகளிர் இல்லம்
## 24ஆவது ஆண்டு நிறைவு விழா

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 24ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் 25-02-2006 சனிக்கிழமை ஸ்ரீ துர்க்காதேவி அன்னபூரணி மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

விழாவுக்கு சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தலைமை தாங்கினார்கள். யூனியன் கல்லூரி அதிபர் திரு. சு. புண்ணியசீலன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் திருமதி யமுனா புண்ணியசீலன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

பரிசில் வழங்கலுடன் கலைநிகழ்சிகளும் இடம் பெற்றன.





# ஒல்லாந்து யாத்திரை (தொடர்)
## பயண ஒழுங்கு

எப்பொழுதுமே வெளிநாட்டுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளு வதற்கு முன்னதாக இங்குள்ள பொறுப்புகளை நிறைவுசெய்ய வேண்டிய கடப்பாடு எனக்கு இருக்கும். பொறுப்புகளைத் தொங்குபொறிவில் விட்டுவிட்டுத் தலைமறைவாகிவிட முடியாது. வழக்கமான பணிகளையும் புதிதாகச் செய்து தருவதாக ஒப்புக் கொண்டவற்றையும் செய்து முடித்துப் புறப்பட்டாலே பயணம் நிம்மதியாக இருக்கும்.

சித்திரை மாதம் ஐந்து நூல்களைப் படித்து மதிப்புரைகள் எழுத வேண்டிய சூழ்நிலை ஒன்று உருவாகியது. செய்து முடித்தேன். இது ஒரு கின்னஸ் சாதனையாகவும் இருக்கலாம்! யார் அறிவார்? தமிழ் தொலைக் காட்சியில்(tviயில்) ‘கலங்கரை விளக்கம்’ என்றொரு முதியோர் நிகழ்ச்சி நடத்திவருகிறேன். நான் வெளிநாடு செல்லவிருப்பதைச் சொன்னபோது ஒருநாளில் இரு காட்சிகளை ஒளிப்பதிவு செய்ய அவர்கள் ஒழுங்கு செய்தார்கள். காலாண்டுப் பத்திரிகை ‘ஆத்மஜோதி’க்கு ஆசிரியராக இருக்கிறேன். ஆனியில் வெளிவரவேண்டிய இதழுக்குரிய விடயங்களைத் தொகுத்து, எழுத்தமைப்புச் செய்வித்து, முதற் பிழைதிருத்தங்களையுஞ் செய்து மிகுதிப் பொறுப்புகளை எனக்கு அப்பணியில் உதவியாக இருக்கும் திருமுறைச் செல்வர் திரு. சிவ முத்துலிங்கம் அவர்களிடம் ஒப்படைத்தேன். ‘தமிழர் தகவல்’, ‘விளம்பரம்’ ஆகியவற்றின் ஆசிரியர்கள் எனது ஆக்கங்கள் தமது பத்திரிகைகளில் தொடர்ந்து வரவேண்டும் என்று விரும்புகின்றவர்கள். அவர்களுக்குரிய கட்டுரைகளையும் எழுதிக் கொடுத்தேன்.

இதற்கிடையில் விமானச் சீட்டு ஒழுங்கினை எனது மகன் திரு. வாரணன் கவனித்து வந்தார். விமானப் பயணம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது யூன் 15 புதன்கிழமை மாலை 6.20க்குப் பயணம். அடுத்த மாதம் 5 ம் திகதி செவ்வாய்க்கிழமை திரும்பிவருதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே 30ஆந் திகதி சட்டமா அதிபர் அமைச்சிலிருந்து கடிதம் ஒன்று வந்திருந்தது, யூன் 22, 2005 காலை 8.30 மணிக்கு உயர் நீதிமன்ற அறங்கூறுநர்(யூரி சேவை) அவையத் தெரிவுக்கு வரும்படி. முன்னரும் இப்படி அழைக்கப்பட்டிருக்கிறேன். ஆனால் தெரிவு செய்யப்படவில்லை. முதல் வழக்குக்குத் தெரிவாகாது போனாலும் அடுத்த வழக்குக்குத் தெரிவாகலாம். அதனால் அழைக்கப்பட்ட நாளிலிருந்து எல்லோரும் உயர்நீதிமன்ற அறங்கூறுநர் தெரிவுக் கூடத்தில் ஒவ்வொரு நாளும் விடுவிக்கப் படும்வரை பிரசன்னமாக இருத்தல் வேண்டும். இது சட்டம்.

இப்பொழுது எனக்குள்ள சிக்கல் தெரிவாகினால் பிரயாணத்தை மேற்கொள்ள முடியாது என்பது. அதற்கு முன்னதாகவே சிக்கலை அவிழ்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு வழிகளும் உள்ளன. நேராகச் செல்வதா கடிதம் எழுதுவதா என்றொரு கேள்வி எழுந்தது. விடையைக் காணக் கடிதத்தை அனுப்பிய அலுவலகத்துக்கே தொலைபேசி எடுத்தேன். அரச அலுவலகங்களுக்குத் தொலைபேசி எடுத்தால் பெரும்பாலும் பதிவுக் குரல்தான் பெசுவது வழக்கம். விநாயகப் பெருமான் அன்றைக்கு ஓர் ஆளையே பேச வைத்தார். நிலைமையை விளக்கினேன். நேராக வரத் தேவையில்லை, கடிதம் எழுதினால் போதும் என்றார்.

அடுத்த நாள் கடிதம் ஒன்றை எழுதி அனுப்பினேன், யூன் 15ஆந் திகதி மனைவியுடன் நெதலாந்து செல்ல இருப்பதால் என்னை யூரி சேவையிருந்து விடுவிக்கும்படி. அதில் விமானச் சீட்டை நான் ஏற்கனவே வாங்கிவிட்டதாகக் கூறி, அதுபற்றிய விவரங்களையும் கொடுத்திருந்தேன்.

கனடா அஞ்சற் சேவை அரச கடிதங்களுக்கு முன்னுரிமை கொடுப்பது வழக்கம். சொன்னால் நம்பமாட்டீர்கள் அடுத்தநாளே, அதாவது யூன் முதலாந் திகதியே நீதி மன்ற அலுவலகத்தில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது, அதுவும் காலை 8.30 மணிபோல். மறுமுனையில் ஓர் இனிய குரல், பெண்ணின் குரல். பெயர், முகவரி எல்லாம் கேட்டுவிட்டு நான் அனுப்பிய கடிதம் கிடைத்தமைபற்றிக் கூறிச் சில கேள்விகள் கேட்டார்.





'உங்கள் வயதென்ன?'

'72 நடக்கிறது.'

'வருத்தங்கள் ஏதாவது உண்டா?'

'உண்டு. மருத்துவச் சான்றிதழ் வேண்டுமாயின் எனது குடும்ப வைத்தியரிடமிருந்து

பெற்றுத் தரலாம்.'

'வேண்டியதில்லை. நீங்கள் யூரிக் கடமையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளீர்கள்.

இம்முறை மட்டுமல்ல, வருங்காலத்திலுந்தான்.'

'நல்ல செய்தி! நன்றி. மிக்க நன்றி.'

'நல்லது.'

தொலைபேசியை வைத்துவிட்டு விநாயகப் பெருமானைக் கும்பிட்டேன். பெருமான் மேலும் பல வெளியூர்ப் பயணங்களுக்கு வழிவகுக்கவுள்ளார் என்பதும் அத்தகைய பயணங்களுக்கு இதுபோன்ற நீதிமன்ற சேவை இனிமேல் தடையாக இருக்கமாட்டாது என்பதும் தெளிவாயிற்று.

கூடவே ஒரு நினைவு பளிச்சிட்டது. அது தென் கெல்டர் ஸ்ரீ வரதராஜ செல்வவிநாயகப் பெருமான்மீது ஒரு பதிகம் பாட வேண்டும் என்பது. கணினிக்கு முன்னால் ஒரே இருகையாய் இருந்து பாடி முடித்தேன். இரண்டு நாட் கழித்து விவேகா அச்சகத்தில் அதனைக் கொடுத்துத் தடித்த பெரிய அட்டை ஒன்றில் அமைத்துத் தருமாறு கேட்டேன். பொதுவாக இன்றைக்குச் செய்ய முடியாது, நாளைக்கு வாருங்கள் அல்லது நாளையின்றைக்கு வாருங்கள் என்று சொல்வதுதான் வழக்கம். அன்றைக்கு 'நில்லுங்கள் இப்பொழுதே செய்து தருகின்றோம்' என்று கூறி ஏறத்தாழ ஒரு மணித்தியாலத்துக்குள் வண்ண நிறங்களில் அழகாக, மிகக் குறைந்த செலவில் அமைத்துக் கொடுத்தார்கள்.

பயண நாள் நெருங்கிக்கொண்டிருந்தது. யூன் 10ஆந் திகதி திரு. கந்தசாமி அவர்களுக்குத் தொலைபேசி எடுத்தேன். அவர் வீட்டில் யாரும் இருக்கவில்லை. அன்று வெள்ளிக்கிழமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலுக்குத்தான் அவர்கள் போயிருப்பார்கள். எனினும் இங்கிருந்து யூன் 15 Air Transat விமான இலக்கம் TS338ல் புறப்பட்டு யூன் 16 காலை 7.40க்கு அமஸ்ரடாமில் இறங்குவோம் என்ற செய்தியை அவரது தொலைபேசியிற் பதிவுசெய்தேன். இதே விவரத்தைக் கோயில் தொலைநகலுக்கும் அனுப்பி வைத்தேன்.

அன்றைய தினம் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் இந்து சமயப் பேரவை நடத்திய சேக்கிழார் குருபூசையிற் கலந்து விட்டு இரவு வீடு திரும்பிய பொழுது மனைவியார் நெதலாந்திலிருந்து திரு. கந்தசாமி அவர்கள் அழைத்து நான் அவருக்குத் தெரிவித்த தகவல் கிடைத்ததென்றும் ஆலய நிர்வாக சபைத் தலைவர் திரு. உதயகுமார் அவர்கள் விமான நிலையத்துக்கு வருவார் என்றும் சொன்னதாகக் கூறினார். அடுத்த நாளும் திரு. கந்தசாமி அவர்கள் எடுத்தார்கள். அப்பொழுது நான் வீட்டில் இருந்தேன். முதல் நாள் மனைவியாருக்குச் சொன்ன தகவல்களை உறுதிப்படுத்தினார். மேலும் நாம் தங்குவதற்கு நிர்வாகம் செய்திருக்கும் ஒழுங்கு களையும் விவரித்தார். மிகுந்த அன்பாகவும் ஆதரவாகவும் பேசினார். எங்கள் பயணம் சுகமாக அமைய ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகப் பெருமான் அருள் செய்வார் என்றும் வாழ்த்தினார். அவர் இருமுறை அழைத்துப் பேசியதும் வாழ்த்தியதும் எல்லாம் எமக்குத் தென்பாக இருந்தன.

## திருமுறை மகாநாடு

**யூலை 29, 30 ஆம் திகதிகளில் திருமுறை மகாநாடு ஒன்ராறியோ இந்து சமயப் பேரவையினரால் நடத்தப்பட வுள்ளது.**


**யூலை 29ஆம் திகதி கனடா கந்தசுவாமி கோவில் ஆலய மண்டபத்திலும், யூலை 30ஆம் திகதி றிச்மண்ட்ஹில் இந்து ஆலய மண்டபத்திலும் நடைபெறும்.**

**மேற்படி மகாநாட்டில் இலங்கை, இந்தியா, ஐரோப்பிய நாடுகளில் இருந்து சைவத் தமிழ் அறிஞர்கள் கலந்துகொள்ள உள்ளனர். முழுநாட்களும் நிகழ்ச்சிகள் நடைபெறும்.**





## இல்லறஞானி அமரரானார்



குடைச்சுவாமியின் பேரன்புக்குரியவரும் அவரின் சமாதியை முன்னின்று தாபித் தவரும் கோண்டாவில் கிழக்கு சந்தியில் அமைந்திருக்கும் நர்த்தன விநாயகர் ஆலயதாபகரும் ஆகிய ஆசைப்பிள்ளை ஐயா அவர்கள் 14-03-2006 செவ்வாய்க் கிழமை கோண்டாவில் கிழக்கில் உள்ள அவருடைய இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார். பெரியார் அவர்கள் சமகாலத் தில் வாழ்ந்த துறவிகள் ஞானிகளின் அன்புக்குரியவர் ஆவார்.

முருகுப்பிள்ளை சுவாமி (கடவுள் சுவாமி) சபாரத்தினம் சுவாமி (திருவாசக சுவாமி) குடைச்சுவாமி, வடிவேல்ச்சுவாமி, மகாதேவசுவாமி, தாளையன் சுவாமி, அருணாசலம் சுவாமி, சோதிச்சுவாமி, மயில்வாகனம் சுவாமி, கணேசானந்தசுவாமி, மோகனதாஸ் சுவாமி ஆகியோரின் பேரன்புக்குரியவர் ஆவார்.

பெரியார் அவர்கள் திருவாசகம் ஓதும் பொழுது உள்ளம் உருகி கண்ணீர் வடித்து ஓதுவதை கேட்போர் மெய்சிலிர்ப்பர். திருமுறைகளிலும் மிகவும் ஈடுபாடுள்ளவர். குடைச்சுவாமியின் மாதாந்த நட்சத்திரத் திதியான கார்த்திகை நட்சத்திரத்தன்று நர்த்தன விநாயகர் ஆலயத்தில் திருவாசகம் முற்றோதலும் அன்னதானமும் நடத்தி வருபவர்.

பெரியார், ஞானிகள் யாவரும் சங்கமம் ஆகும் எல்லாம் வல்ல சிவப்பரம்பொருளின் திருவடி நிழலில் கலந்து பேரின்பப் பேற்றினை பெறப் பிரார்த்திப்போமாக. ஐயாவின் குடும்பத் தினருக்கும், உற்றார் உறவினர் ஆகியோருக்கும் இந்துசமயப் பேரவையினரும்,பேரவையின் திருக்கூட்டத்தினரும், ஆத்மஜோதி ஆசிரியர் குழுவும் தங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

திருமுறைச் செல்வர் சிவ. முத்துலிங்கம்

1. தெய்வீக வாழ்வு வாழ வேண்டும் என்று எல்லோருக்கும் ஆசை உண்டு. ஆனால் வைராக்கிய சித்தத்துடன் தெய்வீக வாழ்வை பின்பற்றுவதில்லை.
2. தெய்வத்தன்மை ஒழுங்காய் அமைந்த இடமே கடவுள் உலகம் எனப்படும். தெய்வத்தின் அருள் தடைப்படாது விளங்குதற்குரிய இடம் உண்மை அன்பு நிறைந்துள்ள இடமாகும்.
3. மெய்யன்பர் கூட்டமே உண்மை அன்பு நிறைந்துள்ள இடமாகும். அன்பு செலுத்துவதில் ஒருவரை விட ஒருவர் விரைந்து முன் செல்லும் இடமே மெய்யன்பர் கூட்டமாகும்.
4. அன்பு வடிவாகிய கடவுளும், அன்பு வடிவாகிய உண்மைத் தொண்டர்களும் ஒருங்கே குழுமியுள்ள இடமே கடவுளது அருளாட்சி நிகழும் இடமாகும்.
5. மாசற்ற அன்பு ஒன்றினால் தான் தெய்வீக வாழ்க்கையின் இயல்பை அனுபவிக்க முடியும். இறை அன்பர்களுக்கு பணி செய்வதால் அன்பு நமக்கு எளிதில் கைவரும்.
6. சொல்லிலும், செயலிலும், எண்ணத்திலும் நாம் அன்பு மயமாக மாறிவிடுவோமானால் நாம் உலகத் துன்பத்தினின்றும் விடுதலை பெற்று உண்மை இன்பத்தை நுகரும் பெருவாழ்வு பெறுவோம். உண்மையான அன்புடையவர்கள் எவ்வகைப்பட்டவர்களுக்கும் எவ்வகைத் தாழ்மையான தொண்டும் இயற்றுவதற்கு பின்வாங்க மாட்டார்கள்.
7. எவ்வகைத் தொண்டையும் பயன் கருதாது செய்வதற்கு மனவெறுப்புக் கொள்ளாத பெரியவர்களே உண்மை அன்பர்கள், உண்மைத் தொண்டர்கள் ஆவார்.
8. அன்புச் செயல்களை நாளடைவில் ஒருவர் பெருக்கிக் கொண்டே வாழ்வாரானால் அன்பு செய்யும் பழக்கம் ஏற்பட்டு அவர் உள்ளம் அன்பு மயமாக மாறிவிடும்.
9. இரக்கம் தெய்வத்தன்மையாதலால் இரக்கம் காரணமாகச் செய்யும் செயலே தெய்வீக வாழ்க்கைக்குரிய அன்புச் செயலாகும்.
10. குற்றம் செய்யும் தன் குழந்தையைத் திருத்துவதற்கு ஆசைப்படும் தாய்போல கெட்டவர்களை, கெடுபவர்களை திருத்த முற்படுதலே அன்புச்செயலாகும்.





11. குற்றம் என்பது பெரும்பாலும் அறியாமையால் நிகழ்வதாகும். அறியாமை காரணமாகத் தீங்கு செய்தவர்கள்மேல் இரக்கம் கொள்ளுதலே சான்றோர் கடமையாகும்.
12. கடவுள் அருள் தம்மைக் காக்கும் என்ற உறுதியுள்ளவர்களின் உள்ளத்தில் தீயவர்களும் உய்ய வேண்டும் என்ற கருணை குடிகொண்டிருக்கும்.
13. நம்மிடம் அருட்குணமில்லையானால் அதனைக் கொடுக்கும்படி கடவுளை இடைவிடாது வேண்டி அதனைப் பெறுதல் நமது கடமையாகும்.
14. குருவினுடைய உபதேசத்தால் நான் என்ற அகங்காரம் அழிந்து விடுகின்றது.
15. ஆன்மாவாகிய பெண்ணைத் தலைவனாகிய இறைவனோடு சம்பந்தப்படுத்தி வைப்பவர்தான் குரு. அந்தக் குரு மூலமாகத் திருவருளே ஆத்மாவை இறைவனோடு சேர்த்து வைக்கின்றது.
16. ஞானமாகவும், வித்தையாகவும், நாவினால் உயர்வாக உச்சரிக்கக்கூடியதாகவும் வாழ்க்கையில் நன்னெறியில் காட்டக்கூடியதாகவும் அமைந்தது நமச்சிவாய மந்திரம் ஆகும். திருவாசகத்தை ஓதி உணர்பவர்களுக்கு நமச்சிவாய மந்திரத்தில் தணியாத பற்று ஏற்படும்.
17. திருவாசகத்தை ஓதி சிவமயமானவர்களுக்கு பார்க்குமிடமெங்கும் நீக்கமறநின்று நமச்சிவாயமே காட்சி கொடுக்கும். நமச்சிவாய என்பது மூலமந்திரம். இம்மந்திரத்தின் விரிவே திருவாசகம்.
18. எனது நெஞ்சில் இறைவனது திருப்பாதம் நீங்காது இருக்கின்றது என்ற பாவனை மிக உயர்ந்த பாவனையாகும். அந்தப் பாவனையில் உயர்ந்துவிட்டால் வேறு சாதனைகள் தேவையில்லை.
19. சுவாமி அரவிந்தரின் பூரணயோகம் கடினமானது. அதன் நோக்கமும் கடினமானது. வாழ்வு முழுவதையுமே யோகமாக்கும் அவரது புதுநெறியை எல்லோராலும் விளங்கமுடியாது. ஏதோ பூர்வசென்ம வாசனையின் பயனாக அன்னை மீரா மிக எளிதில் புரிந்து கொண்டார்.
20. ஆத்மீக சாதனையில் மிக உயர்ந்தவர்கள், தங்கள் தபோசக்தியை பெருக்கிக் கொண்டவர்கள் பிரார்த்தனைகள், தியானங்களில் ஈடுபடும்பொழுது, அவர்களுடைய எண்ணங்கள் சிந்தனைக் கருவூலங்கள் மற்றையோரின் உள்ளத்தில் புகுந்து செயல்வடிவம் கொடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org